# மெய்ப் பொருள்

144

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

Book Presented by:
Dr. T. P. MEENAKSHISUNDARAN,
VICE-CHANCELLOR,
MADURAI UNIVERSITY,
MADURAI.

பாரதி பதிப்பகம்

கராய நகரம் : : சென்னை - 17.

முதற் பதிப்பு: மார்ச், 1955.

இரண்டாம் பதிப்பு: ஆகஸ்ட், 1963

48407
5348
9
31K31

விலை ரூ. 1-75.

# பதிப்புரை

இந்நூல் ராஜாஜி அவர்கள் எழுதிய அரிய கட்டுரைகள் அடங்கியது. முதல் முதலாக வெளிவரும் இத்தொகுதியில் படித்துப் பயன் பெறவும், சிந்தனையைத் தூண்டவும் வாழ்க்கையில் தூய்மை பெறவும் பல சிறந்த கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. இதை வெளியிட அனுமதி தந்த ராஜாஜி அவர்கட்கு எங்கள் இதய நன்றி.

*சென்னை-1,*
*20-3-'55*

**பழ. சிதம்பரன்,**
*பாரதி பதிப்பகம்.*

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-625021

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மெய்ப் பொருள் ... | 7 |
| 2. | உண்மையே ராஜபாட்டை ... | 19 |
| 3. | உலர்ந்த கட்டையும் துளிர்த்து விடும் ... | 27 |
| 4. | சாப்பாட்டில் குற்றம் சொல்ல வேண்டாம் ... | 33 |
| 5. | ஒரு பழைய கான்வொகேஷன் அட்ரெஸ் | 38 |
| 6. | சீதையின் கனவு ... | 43 |
| 7. | சித்தக் கோளாறுகள் ... | 50 |
| 8. | ஒரே வழி ... | 58 |
| 9. | முன்னேற்றத்துக்கு வழி ... | 62 |
| 10. | பக்திப் பாடல்கள் ... | 72 |
| 11. | புது வருஷத் திட்டம் ... | 78 |
| 12. | தமிழ் வியாஸர் ... | 81 |
| 13. | எப்போதும் சிரிக்க வேண்டும் ... | 83 |
| 14. | தீபாவளிப் பட்டாசு ... | 87 |
| 15. | திருக்குறளைப் படி! ... | 90 |

MADURAI UNIVERSITY LIBRARY
★ MADURAI-625021 ★

# மெய்ப் பொருள்

ஆருணேய குலத்தில் பிறந்த சுவேத கேது வுக்கு வயது பன்னிரண்டாயிற்று.

பையனைப் பார்த்துத் தகப்பனார் உத்தாலகர் சொன்னார் : "அப்பனே, யாரேனும் ஒரு குருவைத் தேடி அவரிடம் மாணவனாக அமர்ந்து கல்வி கற்று வருவாயாக. நம்முடைய குலத்தில் பிறந்த எவரும் இதுவரையில் பிறவிப் பிராமணனாக வளர்ந்தது கிடையாது. உன்னால் நம்முடைய குலத்துக்கு ஒரு பழியும் ஏற்படக்கூடாது" என்று.

*    *    *

படித்துப் பண்படாத பிராம்மணர்களுக்குப் பழைய நாட்களில் ஒரு தனிப் பெயர் உண்டு. "பிரம்மபந்து" என்பார்கள். பிராம்மணர்களுக்குச் "சொந்தக்காரன்" என்று பொருள். அதாவது பண்பாடு அடையாமல் பிறவியினால் மட்டும் பிராமணன். க்ஷத்திரியர்களிலும் இவ்வாறே க்ஷத் திரிய ஆசாரமும் பண்பாடும் இல்லாதவனை "க்ஷத்ர பந்து" என்பார்கள். பெயருக்கு மாத்திரம் பிராம் மணர்கள், பெயருக்கு மாத்திரம் க்ஷத்திரியர்கள் அந்தக் காலத்திலும் இருந்தார்கள் என்றும், அவர்

களைப் பெரியோர்கள் பழித்தார்கள் என்றும் இதனல் தெரிகிறது.

* * *

தகப்பனர் சொல்லியவாறு பையன் ஒரு குரு விடம் அமர்ந்து பன்னிரண்டு வருஷம் படித்தான். இருபத்து நான்காவது வயதில் தகப்பனரிடம் திரும்பி வந்தான். நான்கு வேதங்களையும் நன்ருகப் படித்துவிட்டுத் திரும்பினன். குருகுலவாசம் செய்து திரும்பியபோது சுவேதகேது, தான் மகா பண்டிதன் என்று இறுமாப்புக் கொண்டவனக வந்து சேர்ந் தான். தகப்பனர் இதைப் பார்த்து வருத்த மடைந்தார்.

எக்காலத்திலுமே படிப்பானது இறுமாப்பை உண்டாக்கி வந்தது. உண்மையான அறிவு அடை யாமல் பல நூல்களைக் கற்றும் பயனில்லை என்பதை அந்தக் காலத்திலும் கண்டிருந்தார்கள்.

வித்யாகர்வத்தோடு திரும்பிய சுவேதகேதுவைப் பார்த்துத் தகப்பனர் சொன்னர் :

" அன்புக்குரியவனே! எல்லாம் படித்து முடித்து விட்டேன் ; பண்டிதனகிவிட்டேன் என்று கர்வம் கொண்டிருக்கிருய் ! உண்மை அறிவை அடைந் தவன் 'நான் பெரிய பண்டிதன்' என்று தன்னைத் தானே பாராட்டிக் கொள்ளமாட்டான். எல்லாப் படிப்பிலும் முக்கியமான படிப்பு ஒன்று உண்டு. அதை நீ குருவினிடம் பெறவில்லை போலிருக்கிறது. சொல்லுக்கும், எண்ணத்துக்கும், அறிவுக்கும் அடங்

காத பொருளைப் பற்றிக் குருவினிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாயா ?"

தந்தை இவ்வாறு சொல்லக் கேட்டதும் மகன் திகைத்தான். தான் கற்றறியாத விஷயமும் ஒன்று இருக்கிறது என்பதை அறிந்தவுடனே அவனுடைய இறுமாப்புக் கரைந்து போயிற்று. நல்ல குலத்தின் பாரம்பரிய குணமாகிய அடக்கத்தை மறுபடியும் அடைந்தான். "சொல்லுக்கு அடங்காததும் கற்பனைக்கும் அறிவுக்கும் விஷய மாகாததுமான பொருளை உணர்த்தும் உபதேசம் உண்டா?" என்று தகப்பனுரை விநயமாகக் கேட்டான்.

* * *

யுத்த பூமியில் நடைபெற்ற பகவத்கீதை உபதேசக் கதை அனைவருக்கும் தெரியும். கதைகளுக்குள் தலைசிறந்த அந்தக் கதையைப் பாரத நாட்டில் அறியாதாரில்லை. நசிகேதனுக்குக் கடோபநிஷத்தை உபதேசித்த கதையும் ஒரு உத்தமமான தோற்றுவாய். நசிகேதனுடைய தந்தை செய்த யாகத்தில் தம்முடைய எல்லாப் பொருள்களையுந் தானங் கொடுத்தார். "பால் மாறிய பசுக்களைத் தானம் கொடுத்து என்ன பயன்? என்னை யாருக்காவது தானங் கொடுங்கள்!" என்று நசிகேதன் அடிக்கடி தொந்தரவு செய்வது பொறுக்காமல், "உன்னை யமனுக்குக் கொடுக்கிறேன்!" என்ருர் தந்தை. அதையே நிச்சயமாகக் கொண்டு யமலோகத்துக்குச் சென்ருன் நசிகேதன். யமன் கொடுப்பதாகச் சொன்ன பல இன்பங்களையும் வேண்டாம் என்று மறுத்துவிட்டு மெய்ப்பொருள்

உபதேசத்தையே வரமாகத் தரவேண்டும் என்று நசிகேதன் வற்புறுத்தி ஞானம் பெற்ருன் என்பது கடோப நிஷத்தின் தோற்றுவாய்.

அவ்வாறே சாந்தோக்ய உபநிஷத்தின் ஆருவது அத்தியாய உபதேசத்துக்குத் தோற்று வாயும் சிறந்த முறையில் அமைந்திருக்கிறது. படித்த பண்டிதர்களுக்குச் சுபாவமாக உண்டாகும் இறுமாப் பைத் தோற்றுவாயாக அமைத்து விசுவரூப மெய்ப் பொருளின் உபதேசத்தை ரிஷி நமக்கு அருளுகிருர்.

* * *

விநயத்துடனே "புலனுக்கும் அறிவுக்கும் எட் டாத பொருளே உணரச்செய்யும் படிப்பு ஒன்று உண்டா ?" என்று கேட்ட மகனேப் பார்த்து உத்தா லகர் சொல்கிருர் :—" பிரியத்துக்குரிய மைந்தனே! மண்ணிஞல் செய்யப்பட்ட பாண்டங்கள் பலவிதம் உண்டு. ஆனல் ஒரு மண்ணுங்கட்டியை ஆராய்ந்து தெரிந்து கொண்டால், சட்டியும் பானேயும் குடமும் எல்லாம் தெரிந்துவிடும். மண் என்கிற பொருளே அறிந்தால் மண்ணிஞல் ஆகிய சகல பாண்டங்களே யும் அறிந்தபடியாகும். உருவ வேறுபாட்டுக்கு வெவ்வேறு பெயர்கள் தரப்பட்டிருக்கின்றன. உண்மையில் சட்டியும் பானேயும் சுவரும் ஓடும் அனேத்தும் ஒன்றே. மண் என்பதே பொருள் ; மற்றவையெல்லாம் தோற்ற வேறுபாடுகள். மண் ணுக்கும் மண் பாண்டங்களுக்கும் உள்ள சம்பந்தமே பரம் பொருளுக்கும் உலகத்தில் காணப்படும் பல வேறு பொருள்களுக்கும் உள்ள சம்பந்தம்."

மேற்கண்ட சாந்தோக்ய உபநிஷத்தின் உபதேசத்தையே திருவள்ளுவர்,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

என்னும் அருமையான குறளில் குறிப்பிட்டார்.

'மெய்ப்பொருள்' என்பது உபநிஷத்தில் 'சத்து' என்று சொல்லப்படும் அனாதி மூலப்பொருள். அனைத்தும் கடந்த மூலப் பொருளுக்குத் தமிழர்கள் வைத்திருக்கும் சிறந்த பெயர் 'கடவுள்'. அந்த மொழி ஆண்பாலும் அல்ல; பெண்பாலுமல்ல; 'ஈசன்' 'தேவி' என்பதைப்போல் ஆண்பாலாகவோ, பெண்பாலாகவோ இல்லாமல், பால் இறந்த பொருளுண்மையைக் காட்டும் எழுத்து முடிவோடு நிற்கிறது, பரம்பொருளுக்குத் தமிழில் வைக்கப்பட்டிருக்கும் தனிச் சிறப்பு மொழியான 'கடவுள்' என்பது.

* * *

உலகத்துக்கெல்லாம் உபாதான காரணமாகிய பொருளை ஆராய்ந்து அறிந்தால் உலகம் முழுவதையும் அறிந்ததாகும். மெய்ப் பொருளை அறிந்தால் எல்லாப் பொருள்களின் உண்மைத் தன்மையை அறிவோம். சட்டிக்கும், பானைக்கும், ஓட்டுக்கும் உபாதான காரணம் மண். அதைப்போல் அனைத்துக்கும் மூலப் பொருள்களான பஞ்சபூதங்களுக்குமே உபாதான காரணம் ஒன்று உண்டு. அதுவே கடவுள்; அறிவைக் கடந்த பொருள்; அனைத்திலும் உள்ளிருக்கும் உண்மைப் பொருள்.

"மகனே! பொன் மணி ஒன்றை ஆராய்ந்தால் பொன்னால் செய்யப்பட்ட எல்லாப் பொருள்களையும்

அறியலாமல்லவா? உருவ வேறுபாடுகளும் உருவத்துக்கு உரித்தாய பெயர் வேறுபாடுகளும் பல இருக்கும். அவை எவ்வாருயினும் உண்மையில் பொன் என்பதே பொருள். கை வளையல்கள், கழுத்தில் போடும் பொன் மாலை, துணியில் நெய்யப்பட்ட சரிகை முதலிய எல்லாவிதப் பொருள்களையும் தனித் தனியாக ஆராய வேண்டியதில்லை. ஒரு பொன் மணியை ஆராய்ந்தால் போதும். அதனின்று அனைத்தின் தன்மையையும் அறிவோம். நகத்தை வெட்டும் ஒரு *கத்திரிக்கோலை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தோமானுல் கரும்பொன்னுலாகிய எல்லாப் பண்டங்களையும் ஆராய்ந்ததாகும். அனைத்தும் இரும்புதான். வடிவமும், வடிவத்துக்கு உரித்தான பெயர்களுமே வேற்றுமைப்படும். இதைப்போன்றதே நான் உனக்குச் சொன்ன மெய்ப்பொருள் உபதேசம்" என்ருர் உத்தாலகர்.

தகப்பனுர் சொன்னதைக் கேட்ட சுவேதகேது சொல்லுகிருன்: "அப்படியாயின் என்னுடைய ஆசார்யரும், நான் வணங்கிய மற்றப் பெரியார்களும் இந்த விஷயத்தை அறிந்தவர்களில்லையென்று தோன்றுகிறது. அறிந்திருந்தால் அவர்கள் இதை எனக்கு உபதேசித்திருப்பார்கள். ஐயனே! தாங்களே இதை மேலும் எனக்கு விளக்கியருள வேண்டும்" என்ருன்.

"அப்படியே" என்ருர், உத்தாலகர்.

---

* அக்காலத்தில் கத்தரிக்கோலும் அதனுல் நகத்தை வெட்டுவதும் உண்டு என்பதை இதனின்று காணலாம்.

"பிரியத்துக்குரியவனே! முதலில் உலகத்தில் மெய்ப் பொருள் ஒன்றே யிருந்தது. வேறுபாடு அற்றுத் தனித்து நின்றது. அதுவன்றி வேறு எந்தப் பொருளும் இருக்கவில்லை. முதன் முதலில் ஒன்றும் இருக்கவில்லை என்றும், சூன்யமாக இருந்தது என்றும், அதன் பின் பொருள் உண்டா யிற்று என்றும் சிலர் சொல்லுவார்கள். சூன்யத்தி னின்று எவ்வாறு பொருள் உண்டாக முடியும்? சூன்யம் சூன்யமாகவே கிடக்கும். ஆகையால் அந்தக் கொள்கை தவறு. அனாதியாக ஒரு மெய்ப் பொருள் இருந்தது; அதுவே அனைத்துக்கும் மூல காரணம்; நிமித்தம். உபாதானம் என்னும் இரண்டு வித காரணமும் அதுவே. குடத்துக்குக் குயவன் நிமித்த காரணம், பிரபஞ்சத்துக்கு இரண்டுவித காரணமுமாக அனாதி மெய்ப் பொருள் ஒன்றே நின்றது."

'சத்து' என்றால் விமலசத்து,—அல்லது மெய்ப்பொருள். முதலில் 'சத்து' தனித்து நின்றது. பிறகு அது வேறுபாடுகள் கொள்ள எண்ணி உலகம் முழுவதும் உண்டாயிற்று. என்கிற இந்த உப நிஷத்துக் கொள்கையில் தற்கால பௌதிகப் புலவர்கள் ஒப்புக்கொண்டிருக்கும் வழிமுறைப் பரிணாமக்* கொள்கை அடங்கியிருக்கிறது.

இந்த மந்திரத்தை வியாக்கியானம் செய்யு மிடத்தில் ஸ்ரீ சங்கராச்சாரியர் தற்காலப் புலவர்கள் வற்புறுத்தும் பௌதிக † அவினாசத்துவத்தையும் எடுத்துச் சொல்லுகிறார். சூன்யத்திலிருந்து

*Evolution Theory; †Conservation of matter.

பொருள் உண்டாகாது ; இருக்கும் பொருள் அழிந்து சூன்யமாகாது ; உருவ வேறுபாடே உண்டாகும். நீர் உலர்ந்து மறைந்தால் ஆவியாகிக் காற்றில் கலந்துபோனதேயாகும் ; அழிந்து போகவில்லை, விதையிலிருந்து முளை முளைத்துச் செடி உண்டாவது எப்படி ? விதையிலுள்ள உயிரும் பொருளும், காற்றிலிருந்தும் மண்ணிலிருந்தும் வெய்யிலிலிருந்தும் பொருளைத் திரட்டி உண்டாக்கிக் கொள்கின்றன. இல்லாத பொருள் இல்லாமற் போவதுமில்லை. சட்டி, குடம், பானை அனைத்தும் களிமண்ணின் வேறுபாடுகள். அவ்வாறே செடி, மரம், ஆடு, மாடு, மனிதன் இவையனைத்தும் அனாதி மெய்ப் பொருளின் உருவ வேறுபாடுகள். ஒன்றுமில்லாமல் சூன்யமாக இருந்து பிறகு அனைத்தும் உண்டாயிற்று என்கிற கொள்கை தவறு. எப்போதும் எல்லாமே இருந்தது. சிருஷ்டி என்பது அனாதி மூலப்பொருள் உருவவேறுபாடுகள் அடைவதுதான். சாந்தோக்கியமும் இதுவே ; பௌதிக விஞ்ஞான சாஸ்திரமும் இதுவே.

* * *

"அனாதியாக இருந்த விமலசத்து தனியாக இருக்கப் பிரியப்படாமல் 'நான் பலவாருக வேண்டும்' என்று எண்ணிற்று. உடனே அதனின்று 'தீ' உண்டாயிற்று. பிறகு அந்த வெப்பம் 'நான் பலவாருக வளரவேண்டும்' என்று விரும்பிற்று. வெப்பத்தினின்று 'நீர்' உண்டாயிற்று."

ஆதி மூலப் பொருள் வெறும் களிமண் போன்றதன்று. களிமண்ணும் குயவனும் கலந்தது போன்ற

பொருள். அதுவே எண்ணிற்று; அதுவே வேறுபாடு அடைந்தது.

"மெய்ப் பொருளின் விருத்தி உருவமான நீரானது, 'நான் பலவாருகி வளரவேண்டும்' என்று விரும்பிற்று. நீரினின்று 'அன்னம்' உண்டாயிற்று."

அன்னம் என்பதற்கு விரிந்த பொருள் கொடுக்க வேண்டும். அன்னம் என்ருல் இந்தப் பூமி முழுவதுமே என்பது சாஸ்திரம். மண்ணினின்றே எல்லாவித உணவுப் பொருளும் உண்டாகிறது. ஆகையால் 'அன்னம்' என்பது மண் அல்லது பூமி என்பதற்கு ஆகு பெயராகச் சாஸ்திரத்தில் வழங்கி வருகிறது.

'தீ எண்ணிற்று', 'நீர் எண்ணிற்று' என்கிற பொழுது, தீயிலும் நீரிலும் நிற்கும் விமலசத்துப் பொருளாகிய பராசக்தி எண்ணிற்று என்று வைத்துக்கொள்ள வேண்டும். ஆதி காரணமான மெய்ப் பொருளானது உருவ வேறுபாடுகளைக் கொண்டு நீரும் மண்ணுமாக அசேதனமாய் நின்ருலும் அவற்றினுள் அந்தர்யாமியாக நிற்கும் பராசக்தியின் குணம் அதில் அழிந்து போகவில்லை. மெய்ப் பொருளின் போக்கே பிரகிருதி நியதிகள். கண்டதும் காணப் போவதுமான இயற்கைப் பரிணும முறைகள் மெய்ப் பொருளின் வேகமே.

* * *

"அந்த ஆலமரத்தின் பழம் ஒன்று கொண்டு வா!" என்ருர் உத்தாலகர்.

"இதோ" என்று ஒரு பழத்தைக் கொண்டு வந்து, காட்டினன் சுவேதகேது.

"அதைப் பிதுக்கிப் பார்; உள்ளே என்ன இருக்கிறது?" என்றார் தந்தை.

"சின்னஞ் சிறு விதைகள்" என்றான் மகன்.

"அந்த விதைகளில் ஒன்றை நசுக்கிப் பார். உள்ளே என்ன இருக்கிறது?"

"உள்ளே ஒன்றும் காணவில்லை."

"மகனே! கண்ணுக்குப் புலப்படாததும், இந்தச் சிறிய விதைக்குள்ளே இருப்பதுமான அணுப் பொருளிலே ஒரு பெரிய ஆலமரம் முழுவதும் இருக்கிறது. அதனின்று இலைகளும் விழுதும் கொண்ட ஆலமரம் வெளிப்படுகிறது. இதைப்போலவே அணு மாத்திரமான மூலப் பொருளிலிருந்து சகலமும் உண்டாகிறது. அதுவே பிரபஞ்சத்திற்கு ஆத்மா! அதுவே நீயும்!" என்றார் உத்தாலகர்.

ஒரு சின்னஞ் சிறு விதைக்குள் மரத்தின் முழு வடிவமும், இலக்கணங்களும், அவ்வளவும் அடங்கி நிற்பதால் அல்லவோ அதினின்றும் மரம் உண்டாகிறது? ஒரே மண்ணில் நடப்பட்ட விதைகள் காற்றும் நீரும் உட்கொண்டு, தத்தம் வடிவத்தோடும் இலக்கணங்களோடும், வெவ்வேறு மரங்களாக உண்டாகின்றன. இவ்வளவும் சிறு விதைக்குள் அணுப் பிரமாணத்தில் அடங்கி நிற்பதைக் காட்டி, ரிஷி உத்தாலகர் அனாதி மூலப் பொருளைப்பற்றி உபதேசித்தார். இத்தனை பிரம்மாண்டமான சந்திர சூரிய நட்சத்திரங்களும், மலைகளும் ஆறுகள் சமுத்

திரமும், கோடிக்கணக்கான ஜீவ பேதங்களும், ஒரு அணுவான சத்து அல்லது மெய்ப்பொருளிலிருந்து உண்டாயிற்று. என்று நம்புவது எப்படி? என்ப தாகச் சந்தேகப்பட்ட மகனுக்குத் தந்தை ஆல மரத்து விதையைக் காட்டி விளக்கிச் சொன்னார். "சின்னஞ் சிறிய விதையிலிருந்து ஆலமரம் எவ்வாறு உண்டாயிற்று? மரமும், கிளையும், இலையும், விழுதும், ஆலமரத்தின் பாலும், எல்லா லட்சணங்களும் அந்தச் சிறு விதைக்குள் முதலில் அடங்கிக் கிடக்கவில்லையா? அதைப் போலவே பிரபஞ்சம் முழுதும் ஒரு அணுவின் பரிணமம்!" என்று விளக்கினார்.

* * *

"ஒரு பாத்திரத்தில் தண்ணிர் எடுத்து அதில் கொஞ்ச உப்புப் போட்டு வைத்திருந்து காலையில் கொண்டுவா" என்றார் உத்தாலகர். சுவேதகேது அவ்வாறே செய்தான்.

"நேற்றுத் தண்ணீரில் போட்ட உப்பை எடு" என்றார் தகப்பனார்.

"அது அழிந்துபோயிற்று" என்றான் மகன்.

"தண்ணீரில் மேலாகக் கொஞ்சம் அருந்து" என்று தந்தை மறுபடியும் கட்டளையிட்டார்.

அருந்திப் பார்த்துவிட்டு, "உப்பா யிருக்கிறது" என்றான் மகன்.

"மத்திய பாகத்தை அருந்திப் பார்" என்றார்.

"அதுவும் உப்பாகத்தான் இருக்கிறது" என்றான் சுவேதகேது.

"அடிப்பாகத்தையும் குடி" என்றார். அதுவும் உப்பாகத்தான் இருந்தது.

"பாக்கி இருப்பதை வெளியே கொட்டிவிட்டு வா" என்றார்.

கொட்டிவிட்டுத் திரும்பிய மகனைப் பார்த்து ரிஷி சொன்னார் :—"மகனே! வெளியே தரையில் ஊற்றி விட்டபோதிலும் உப்பு அழியவில்லை. கண்ணுக்குப் புலப்படாத உப்பு அழியாமல் முன்போலவே இருக்கிறதைக் கண்டாய். இவ்வாறே சகல பிரபஞ்சத்துக்கும் மூல காரணமான மெய்ப்பொருள் புலன்களுக்குப் புலப்படவில்லையாயினும், அப்படியே இருக்கிறது என்பதை அறிவாய். நீயும் அந்த மெய்ப் பொருளே ஆவாய். தத் த்வமஸி!"

* * *

உலகத்தில் காணப்படும் பொருள்கள் அனைத்துக்கும் முதற் காரணமாகிய மெய்ப்பொருளைப் பற்றிய ஆராய்ச்சியே உண்மையான அறிவாகும். இந்த ஆராய்ச்சியை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நமது முன்னோர்கள் நடத்தியிருக்கிறார்கள். அத்தகைய மகா புருஷர்களின் பரம்பரையிலே தோன்றிய நாம் பாக்கியசாலிகள்.

# உண்மையே ராஜபாட்டை

என் வாலிப நண்பர் ராஜசேகரன் எஞ்ஜினீரிங் காலேஜில் படித்து வருகிருர். தீவிர சீர்திருத்தக் காரர்.

“கோபித்துக் கொள்ளாமலிருந்தால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். வேதாந்த ஆராய்ச்சியிலும் பழைய குப்பைகளிலும் ஏன் வீணுகப் பொழுது போக்குகிறீர் ? புராணக் கதைகளில் என்ன இருக்கிறது ? ஜாதி வித்தியாசங்களை ஒழித்தாலொழிய நமக்கு விமோசனங் கிடையாது” என்ருர்.

ஒரு நாள்மாலை கடற்கரை மணலில் நான் நடந்து கொண்டிருந்தபோது, என்னை அவ்விடம் சந்தித்து, “பழைய புஸ்தகங்களில் ஒன்றும் அவ்வளவாக தவறுகள் இல்லையே? புதிய புஸ்தகங்களிலுங்கூட நூற்றுக்கு முப்பது பங்கு பொய்யும் விஷமும்தானே இருக்கிறதாகத் தோன்றுகிறது” என்று மெதுவாகச் சொல்லிப் பார்த்தேன்.

“பிராமண குலத்தின் லாபத்திற்காகவே எழுதியிருக்கும் இந்த நூல்களை ஏன் இன்னும் கட்டிக் கொண்டு அழுகிறீர் ?” என்ருர் எஞ்ஜினீர் ஆகப் போகிறவர்.

"எந்தப் புஸ்தகத்தைப்பற்றிச் சொல்கிறீர்? ராமாயணமா? கீதையா? பாரதமா?" என்றேன்.

"எல்லாவற்றையும் பற்றித்தான் சொல்லுகிறேன். உங்கள் உபநிஷத்தைப்பற்றியும்தான்" என்றார்.

ஒரு கட்டுமரம் மணலில் அவிழ்த்துப் போட்டிருந்தது. அதன்மேல் சௌகரியமாக உட்கார்ந்தோம்.

"உபநிஷத்தில் என்ன இருக்கிறது? எவ்விடத்தில் எடுத்துப் பார்த்தாலும் யாகங்கள் செய்வதைப் பற்றித்தான் இருக்கிறது" என்றார் ராஜசேகரன்.

"அந்தக் காலத்தில் யாகங்கள் செய்துகொண்டிருந்தார்கள். ஆதலால், அதைப்பற்றிச் சொல்லியிருப்பதில் என்ன பிசகு? இந்தக்காலத்துப் பத்திரிகைகளில் கிரிக்கெட்டைப்பற்றியும் ஸினிமாவைப் பற்றியுந்தானே பத்தி பத்தியாக எழுதப்படுகிறது? ஆனால் உபநிஷத்தின் விஷயம் வேறு" என்றேன்.

"உபநிஷத்தில் யாகங்கள் செய்யச் சொல்லித்தானே எழுதியிருக்கிறார்கள்?"

"இல்லவே இல்லை. யாகங்கள் செய்யச் சொல்லவும் இல்லை; பிராமணர்களுக்காகப் பொய்ப் பட்சபாதமும் உபநிஷத்தில் இல்லை" என்று அழுத்தமாகச் சொன்னேன்.

அதன்மேல் சாந்தோக்ய உபநிஷத்திலிருந்து ஒரு கதை எடுத்து அவருக்குச் சொன்னேன்.

* * *

ஐந்து பிராமணப் பண்டிதர்கள் பரம்பொருளைப் பற்றி உபதேசம் பெறுவதற்காக உத்தாலகர் என்ற

ஒரு பெரியாரிடம் சென்றார்கள். உத்தாலகர், "என்னைவிட அதிகம் தெரிந்த அசுவபதியிடம் போகலாம் வாருங்கள்" என்று, அவரும் சேர்ந்து எல்லாருமாக அசுவபதியிடம் போனார்கள்.

அசுவபதி ஒரு க்ஷத்திரியன்; சிற்றரசன். வந்த பிராமணர்களுக்கு அவன் முறைப்படி மரியாதையும் உபசாரமும் செய்தான். "ஐயன்மீர்! உங்கள் தவம் சரியாக நடைபெறுகிறதா? என் சிறு நாடு உங்கள் அனுக்கிரகத்தால் அறம் வழுவாமல் காப்பாற்றப் பட்டு வருகிறது. திருடர்கள், லோபிகள், குடியர்கள், கல்வி பெறாத மூடர்கள், ஒழுக்கம் கெட்டவர்கள், யாருமே நகரத்திலாவது கிராமங்களிலாவது கிடை யாது. ஆகையால் ஒழுக்கம் தவறிய ஸ்திரீகள் இல்லை என்று நான் சொல்லவும் வேண்டியதில்லை. நான் ஒரு யாகம் நடத்த எண்ணியிருக்கிறேன்."

"வந்ததா யாகம்?" என்றார் ராஜசேகரன்.

"அவசரப்படவேண்டாம், கேளும்" என்று சொல்லிக் கதையைத் தொடர்ந்தேன்.

* * *

"இந்தச் சமயத்தில் நீங்கள் வந்தது என் பாக் கியம்" என்றான் அசுவபதி.

"நீங்கள் இருந்து இந்த யாகத்தை நடத்திக் கொடுத்துத் தக்ஷிணை பெற்றுப் போகவேண்டும். வழக்கம்போல் குறைவு இல்லாமல் செய்வேன்."

பிராமணர்கள், "அரசனே! நாங்கள் வந்த காரியம் வேறு. நீர் பரம்பொருளைப்பற்றி ஞானம்

அடைந்திருக்கிறீர் என்று கேள்விப்பட்டு, உபதேசம் பெற வந்தோம்" என்றார்கள்.

"நாளை பேசலாம்" என்றான் அசுவபதி.

மறுநாள் அதிகாலையில் பிராமணர்கள் சென்றனர். குருவின்முன் சீடர்கள் நிற்பதுபோல் க்ஷத்திரியனான அசுவபதியின்முன் பிராமணர்களும் உத்தாலகரும் கையில் விறகுக் குச்சிகள் வைத்துக் கொண்டு வணங்கினார்கள். இது அந்த நாட்களில் வழங்கிவந்த சீடர்களுடைய பண்பாடு.

அரசனும் உபதேசத்துக்குரிய பூர்வ சடங்குகள் ஏதும் இன்றி பிராமணர்களுக்கு உபதேசித்தான்.

"உம்முடைய வாதத்தின் பொருள் தெரிந்தது. உபநிஷத்தில் இம்மாதிரி இருந்தாலும் இருக்கலாம். ஆனால் பிந்தி வியாக்யானம் செய்தவர்கள் எல்லாவற்றையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி யிருக்கிறார்களே, அதற்கென்ன செய்வது?" என்றார் ராஜசேகரன்.

"ஏன் இப்படிச் சொல்கிறீர்? வியாக்கியானம் செய்திருப்பவர்களில் ஒருவர் சங்கராச்சாரியர். அவர் ஒன்றும் உபநிஷத்தைக் கெடுக்கவில்லையே?" என்றேன்.

"சங்கராச்சாரியர் அத்துவைதம் ஸ்தாபித்துவிட்டுப் புகழ் பெற்றார். ஆனால் ஆசாரங்கள் விஷயத்தில் அவர் என்ன சொல்லுகிறார்? பழைய பாடம்தானே?" என்றார்.

"புகழ் பெறுவதற்காக ஏதோ செய்துவிட்டுப் போய்விடவில்லை சங்கராச்சாரியர்" என்றேன், கொஞ்சம் கோபமாக.

"இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் வியாக்கியான்த்தில் மழுப்பித்தான் இருப்பார்" என்ருர் ராஜசேகரன்.

"அவர் எழுதியிருப்பதைக் கேட்க விரும்பினுல் சொல்லுகிறேன்" என்றேன்.

"தமிழில் சொல்லுங்கள்" என்ருர் ராஜசேகரன், வடமொழியின் பேரில் தனக்குள்ள வெறுப்பைக் காண்பிக்க.

*　　*　　*

"ஏதேனும் ஒரு காரியத்தின்பொருட்டு ஒருவன் மற்ருெருவனிடம் போனுல் உடனே தெளிவாக இன்ன காரியத்தின்பொருட்டு வந்தேன் என்று சொல்லவேண்டும். இதுதான் பண்பட்டவர்களின் ஆசாரம். அதை அனுசரித்து இந்தப் பிராமணர்கள் அசுவபதியிடம் தாங்கள் சென்ற நோக்கத்தை உடனே விவரமாகச் சொன்னுர்கள். வேதம் ஓதிய உயர் குலத்தவர்கள் ஜாதி அகம்பாவத்தை ஒழித்துத், தங்களைவிட ஒருபடி தாழ்ந்த குலம் என்று கருதி வரப்பட்ட க்ஷத்திரியனைக் கையில் சமித்து எடுத்து வணங்கி நின்ருர்கள். இதைக் கவனிக்க வேண்டும். அறிவு அடையவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் உயர்குல அகம்பாவத்தை ஒழித்து உபநிஷத்தில் சொல்லியவண்ணம் குரு எந்தக் குலமாயினும் வணக்கத்துடன் நடந்து கொள்ளவேண்டும்.

"அரசனும் யாதொரு மந்திர பூர்வ சடங்குமின்றி உபதேசம் செய்ய ஆரம்பித்தான் என்று

உபநிஷத்தில் சொல்லியிருப்பதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்ருல்:— அறிவு பெற்றவன் தகுந்தவர்களுக்குத் தடையும் தாமதமும் இன்றி உபதேசிக்க வேண்டும். இது அறிவு படைத்தவனுடைய கடமை. உபநிஷத்துக் கதையில் இந்தத் தத்துவம் கிடக்கிறது."

* * *

"இவ்வாறே சங்கராச்சாரியர் எழுதியிருக்கிருரா? அல்லது, இது உங்கள் வியாக்கியானமா?" என்று ராஜசேகரன் கேட்டார்.

"இவ்வாறே தம் நூலில் சங்கராச்சாரியர் எழுதியிருக்கிருர். என் சரக்கு அல்ல. ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாகவே எழுதிய நூலில் இவ்வாறு எழுதியிருக்கிருர். சீர்திருத்தத்துக்காகக் கிளர்ச்சி செய்கிறவர்கள் நம்முடைய முன்னேர்களைப்பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

நண்பர் ராஜசேகரன் கொஞ்சம் தளர்ந்தார்.

"எல்லாவற்றுக்கும் வேதமே பிரமாணம் என்கிருர்களே, அப்படி வைத்துக்கொண்டால் ஸயன்ஸ், பூகோளம், சரித்திரம் ஏதும் வேண்டாமே? புது ஆராய்ச்சிக்கு இடமே இல்லையல்லவா? கிரகணம் பிடித்தால் பாம்பு சூரியனைப் பிடித்துக்கொண்டது. பூனை குறுக்கே ஓடினுல் போன காரியம் கெட்டுப் போகும் என்றெல்லாம் அல்லவோ வேதம் சொல்லுகிறது? இதைப்பற்றியெல்லாம் உங்கள் சங்கராச்சாரியர் என்ன சொல்லுகிருர்?" என்ருர்.

"அவ்வாறெல்லாம் வேதத்தில் சொல்லவில்லை. பாம்பு சூரியனை விழுங்குவதாகச் சொல்லிக்

கொண்டே நம்மவர்கள் அப்படி விழுங்குவதைக் கணக்குப் போட்டு எந்தத் தேதியில் எந்த மணியில் சம்பவம் நடக்கும் என்பதைக் கண்டு சொல்லியும் வருகிறூர்கள் அல்லவா? பகவத் கீதை வியாக்கியானத்தின் முடிவில் ஒரு விஷயம் சங்கராச்சாரியர் எழுதியிருக்கிறூர். அதைக்கேட்டால் ஆச்சரியப் படுவீர்" என்றேன்.

"சொல்லும் கேட்கலாம்" என்றூர் வாலிபர்.

* * *

"வேதத்திலிருந்து மேற்கோள் எடுத்துச் சொல்லி ஆட்சேபிப்பவர்களைப்பற்றிச் சொல்லு கிறூர்:

"கண்ணுல் கண்டோ, அல்லது வேறு வழியில் பிரத்தியட்சமாக நாம் சந்தேகமின்றி அறியக்கூடிய விஷயத்தில் சுருதியைப் பிரமாணமாக எடுத்துக் காட்டுவது தவறுன முறை. பௌதிக அறிவினுல் காணமுடியாத விஷயங்களுக்குத்தான் சுருதிப் பிரமாணம். நெருப்பு குளிர்ந்திருக்கும், அல்லது வெளிச்சம் இருள் கொண்டிருக்கும் என்று, நூறு சுருதி வாக்கியங்கள் தேடி எடுத்துச் சொன்னுலும் அவை பிரமாணம் அல்ல. அவ்வாறு வேதத்தில் சொல்லியிருந்தாலும் அதைச் கவனிக்க வேண்டிய தில்லை. அல்லது பதங்களுக்குச் சாத்தியமான வேறு பொருள் கொடுத்துப் படிக்கவேண்டும்."

ராஜசேகரன் எழுந்து நின்றூர். முகத்தில் மகிழ்ச்சிக் குறி கண்டேன்.

"நம்முடைய பெரியோர்கள் அறிவுப் பிரமாணங் களைப்பற்றியும் ஜாதி உயர்வு தாழ்ச்சியைப் பற்றியும் இப்படியெல்லாம் எழுதியிருக்கிறூர்களா?" என்றூர்.

“ நம்முடைய அறிவீனமும் சோம்பலுமே நம்முடைய தாழ்ச்சிக்குக் காரணம். நம்முடைய முன்னோர்கள் எழுதிய உபநிஷத்திலாவது வேறு நூல்களிலாவது உண்மை ஆராய்ச்சிக்கும் உண்மை அறிவைப் பின்பற்றி வாழ்க்கை நடத்துவதற்கும் எவ்விதத் தடையும் கிடையாது ” என்றேன்.

* * *

பழைய வேதாந்த நூல்களில் அக்காலத்தில் ஜனங்கள் நம்பிய பௌதிக விஷயங்களை உதாரணமாகவோ, அல்லது விளக்க முறையில் சேர்த்தோ சொல்லியிருக்கலாம். ஆனால், அந்த விஷயங்களைப் பற்றிச் சுருதி வாக்கியமே பிரமாணம் என்றாவது, அவற்றைப்பற்றிப் புதிய ஆராய்ச்சியே கூடாது என்றாவது, ஆராய்ச்சிப் பயனை ஒப்புக்கொள்ளுவது சநாதன தருமத்திற்கு விரோதம் என்றாவது சாஸ்திரத்தில் சொல்லப்படவில்லை.

வேதமும் வேதாந்தமும் பௌதிகத்திற்கு உட்படாத விஷயத்தைப்பற்றிய சாஸ்திரம். பௌதிக விஷயங்கள் பௌதிக ஆராய்ச்சியின் முடிவையே பொருந்தி நிற்கவேண்டும். ஆராய்ச்சியின் பயனாக முன்னால் ஜனங்கள் நம்பியது பின்னால் தள்ளப்படலாம். வேதமாவது வேதாந்தமாவது அதைத் தடுக்கவில்லை. வேதாந்தத்துக்கும் புதிய பௌதிக அறிவுக்கும் யுத்தம் கிடையாது. உண்மையே பிரதானமாகக் கொண்டது வேதாந்தம். “உண்மையே வெற்றி அடையும்; உண்மையே ராஜபாட்டை” என்பது உபநிஷத்து வாக்கியம்.

# உலர்ந்த கட்டையும் துளிர்த்துவிடும்

"மறை" என்றால் மறைந்து நிற்கும் பரம் பொருளை விளக்கும் நூல் என்று பொருள். மறைத்து வைக்கவேண்டிய நூல் என்றல்ல.

"இந்த உபதேசத்தை ஒரு உலர்ந்த கட்டையின் மேல் நீ தெளித்தாயானாலும் அது துளிர்த்து, இலையுங் கிளையும் கொள்ளும்" என்று சத்தியகாம ஜாபாலர் சாந்தோக்கியத்தில் ஒரு அத்தியாயத்தை முடிக்கிறார்.

உண்மையின் ஜீவிய சக்தியை இது எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுகிறது! உலர்ந்த கட்டையும் உயிர்கொண்டு தழைக்கும் என்றால், புத்திமானுக்கு அறிவு ஊட்டி உய்விக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

*　　　　*　　　　*

உண்மையின் சக்தி இவ்வாறாயினும், போதனை முறையில் நம்முடைய முன்னோர்கள் சில நிபந்தனைகளை வைத்திருந்தனர். காலத்துக்கு ஏற்றவாறு முறைகளை மாற்றவேண்டியதாயினும், பழைய நிபந்தனைகளை ஆராய்வதில் பயனுண்டு. அவற்றில் காணும் சில தத்துவங்கள் என்றைக்குமே பொருந்தும்.

நம்முடைய முன்னோர்களுடைய முக்கியமான கொள்கை ஒன்று என்னவென்றால், சிக்கலான விஷயங்களை ஆசாரியன் சொல்லி பக்தியுடன் சீடர்கள் நேரில் கேட்டால்தான் உண்மைகள் சரியாக விளங்கும்; எழுத்துவாயிலாக உபதேசம் சரிவரப் பெற முடியாது என்பது.

உபநிஷத்து என்று பெயர்கொண்ட நூல்கள் வெறுங் குறிப்புகளாகவே யாக்கப்பட்ட நூல்களெனக் கருதலாம். நேரில் கேட்டு உபதேசம் பெற்ற சீடர்கள் தாம் கற்றறிந்ததை, பிறகு வேண்டும்போது நினைவுக்குத் தந்து கொள்ள இக்குறிப்புகள் உதவுமேயொழிய, அக்குறிப்புகளைக்கொண்டே ஞானம் பெற முடியாது.

இக்காலத்திலும் பள்ளிக்கூடங்களில் நடைபெறும் முறையைக் கவனித்தால், உபாத்தியாயர்கள் சொல்லி மாணவர்கள் எழுதிக்கொள்ளும் குறிப்புகளும் இவ்வாறே என்பதைக் காணலாம். கலாசாலைகளில் உபாத்தியாயர்கள் சொல்லும் குறிப்புகளை அச்சடித்துப் புத்தக வடிவமாக வழங்கிவிட்டு நேரில் புலவர்கள் விளக்கிச் சொல்லுவதைக் கேட்கக் கலாசாலைக்குப் போகாமல் நின்றுவிட முடியாது. அத்தகைய குறிப்புகளை அச்சிடுவதே கூடாது என்பார்கள். புலவர்கள் விளக்கியதை நேரில் கேட்ட மாணவர்களுக்குத்தான் அக் குறிப்புகள் பயன்படும். இந்த உண்மையை யறிந்தே முற்காலத்திலும் சாஸ்திரங்களைக் குருவிடம் நேரில் உபதேசம் பெற்றுப்படிப்பதுதான் முறை என்று பெரியோர்கள்

விதித்தார்கள். அக்காலத்தில் அச்சு கிடையாது. ஆகையால் மனனத்திற்குச் சவுகரியமாக உபதேசக் குறிப்புகளைச் சந்தம் பொருத்தி யாத்து முனிவர்கள் பாடினார்கள். பழைய விஷயங்களை விமரிசனை செய்யும்போது பழைய காலத்திய நிலைமையை நன்றாகக் கவனித்தல் வேண்டும். இதற்கு வேண்டிய கற்பனா சக்தி இல்லாதவர்களால் விஷயங்களை ஆராய்ச்சி செய்ய இயலாது.

* * *

உபநிஷத்து முதலிய சாஸ்திரங்களை முற்காலத்திய அறிஞர்கள் மறைத்து வைத்துக்கொண்டு பொது ஜனங்களுக்குத் தாராளமாக விநியோகிக்காமல் உலோபிகளாக நடந்து கொண்டார்கள் என்று சிலர் தவறாக எண்ணுவதுண்டு. மருந்துகளை வைத்தியர்கள் மிக ஜாக்கிரதையாகத்தான் வைத்து வழங்குவார்கள். மருந்தை அறிந்து உபயோகித்தால் அது அமிருதம் போன்ற பொருளாகும். ஆனால், அதுவே அறியாதவர்கள் கையில் அபாயமான விஷமாகும். அத்தியாத்ம உண்மைகள் பக்குவமும் தகுதியும் பார்த்தே உபதேசம் செய்யத்தகும். தீர விளங்காத விஷயங்கள் தவறான பொருளும் பயனும் கொண்டு தீமைக்கு ஏதுவாகும்.

* * *

முற்காலத்திய போதனா முறை நிபந்தனைகளை உபநிஷத்துகளில் காணலாம். சீடன் ஆசாரியனிடம் அன்பும் பக்தியும் கொண்டு அவருக்குச் சேவை செய்வதையே முக்கிய காரியமாகக் கருதவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு செய்தால்

தான் அவருடைய உள்ளமும் சீடனுடைய உள்ளமும் ஒன்றாகச் சேர்ந்து, அவர் செய்யும் உபதேசத்தின் பொருள் விளங்கி, வேர் ஊன்றிப் பயன்பெறும். குருவுக்குச் சேவை செய்வதே பிரமசாரியின் முதல் கடமை. சேவை செய்து மிகுந்த நேரத்தில் உபதேசம் பெறவேண்டும் என்பது விதி. தற்காலத்தில் இது வியப்பாகத் தோன்றும். ஆயினும், இதில் ஒரு தத்துவம் அடங்கியிருக்கிறது. சரியான மனப்பான்மைக்கு அத்தாட்சியும் ஏதுவுமான சேவையால் சீடனைப் பரீட்சையும் பக்குவமும் செய்தே உபதேசம் தரவேண்டும்.

* * *

குருவுடன் வாசம் செய்யும் சீடனுக்கே உபதேசம் செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. தகப்பனிடம் அல்லது ஆசாரியனிடம் ஒரு வருஷ காலமாவது குருகுலவாசம் செய்த சீடன் உபதேசம் பெறலாம். மற்றவர்களுக்கு உபதேசிக்க வேண்டாம் என்று பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு இடத்தில் குடியிருந்துகொண்டு, படிப்புக்கு மட்டில் குருவிடம் போய் உபதேசம் பெறுவதில் பயனில்லை. தற்காலத்திய கல்விமுறைப் புலவர்களும் இதையே சொல்வார்கள்.

* * *

உபதேசம் பெறும் சீடன், தான் அறிந்ததைப் பிறருக்கு முறைப்படி உபதேசம் செய்யவேண்டியது கடமை. அவ்வாறு செய்யும் எண்ணங் கொண்டவனுக்கே உபதேசம் செய்யவேண்டும் என்று உப

நிஷத்துகளில் விதிக்கப்பட்டிருக்கிறது. கல்வி கேள்விகளின் காப்புக்கும் வளர்ச்சிக்கும் இந்த விதி மிக முக்கியமானது. பிறருக்குக் கொடுக்க உத்தேசித்தவனுக்கே கல்விச் செல்வம் வழங்கவேண்டும்.

* * *

சீடன் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியவனுக இருக்கவேண்டும். சமூகப் பழக்க வழக்கங்களை நிராகரித்தவனுக இருக்கக்கூடாது. தன் கடமைகளைச் சரியாகச் செய்திருக்கவேண்டும். உபதேசம் பெறுவதற்கு முந்தி படித்து முடித்திருக்க வேண்டியதையெல்லாம் குறைவின்றிப் படித்திருப்பதோடு, கோபத்தையும் ஆசைகளின் வேகத்தையும் அடக்கினவனுக இருக்கவேண்டும். குணசீலனுக இல்லாதவனுக்கு உபதேசம் செய்யக்கூடாது.

நல்ல பெருந்தன்மை கொண்டவனும், தெய்வ பக்தியுள்ளவனும், குருவைத் தெய்வம்போல் கருதிப் பக்தி செலுத்துபவனுமான சீடனுக்குச் சொன்னல் உபதேசத்தின் பொருள்கள் ஒளிபெற்று விளங்கும் என்பது உபநிஷத்து வாக்கியம்.

* * *

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஆசாரியனிடத்தில் பெறவேண்டிய உபதேசத்தைப் பெற்று, முறைப்படி பிரமசரியம் முடிந்தபின் விவாகம் செய்துகொண்டு இல்லறம் நடத்தி, இல்லற வாழ்க்கையிலும் கற்றதை மறக்காமல் கிரமமாகச் சிந்தனை செய்துகொண்டு வந்து, நல்ல குழந்தைகளைப் பெற்று, குடும்பக்

கடமைகள் முடிந்தபின், புலன்களை அடக்கி ஜீவ காருண்ய விரதம் பூண்டு வாழ்க்கைப் பிரயாணத்தை முடிக்கவேண்டும் என்பது நம்முடைய முன்னோர் களின் கொள்கை. மரணம் வரையில் குடும்பப்பற்றும் அதனாலுண்டாகும் கவலைகளையும் வைத்துக் கொண் டிருக்கக் கூடாது. கல்விப் பருவம், இல்லறப் பருவம், தவப்பருவம் என ஆயுள் நாளைப் பங்கிடுதல் வேண்டும். அவ்வாறு வகுத்துக்கொண்டு கடமை களைக் கவனித்தால் அறிவும் ஆற்றலும் பெற்று, அவ்வப் பருவக் கடமைகளையும் சரிவரச் செய்வோம்.

# சாப்பாட்டில் குற்றம் சொல்ல வேண்டாம்

'அந்நம் ந நிந்த்யாத் தத்வ்ரதம்!'

"உண்ணும் உணவைப் பழித்தலாகாது. இது விரதமாகும்" என்று தைத்திரீய உபநிஷத்தில் பிருகுவுக்கு அவர் தகப்பனார் உபதேசித்திருக்கிறார்.

தற்காலத்து வைத்திய சாஸ்திரப் புலவர்களும் இதையே சொல்வார்கள். ஆகாரம் உட்கொள்ளும் சமயத்தில் அதைப் பழித்தலோ, குறை கூறலோ, சந்தேகித்தலோ ஆரோக்கிய முறையாகாது. சாப்பிடும் போது, இது நல்லது, இது ஜீரணமாகிவிடும், இது எனக்கு ஆரோக்கியம் தரும், பலம் தரும், உள்ளத்தையும் சுத்தமாக்கும் என்றே எண்ணி உணவை உட்கொள்ளவேண்டும் என்பது ஆரோக்கிய சாஸ்திர நியதி. நாம் எண்ணும் எண்ணங்களுக்கு அதிக சக்தி உண்டு. புசிக்கும்போது நாம் கொள்ளும் நம்பிக்கையே உணவை நல்லதாகவும் தீயதாகவும் செய்யும்.

* * *

ஜீவன்கள் அனைத்தும் உணவிலிருந்து உண்டாகின்றன. ஜீவன்களின் உயிரைத் தாங்குவதும் உணவேயாகும். இவ்வளவே யல்ல. ஜீவன்கள்

அனைத்தும் முடிவில் உணவாகவே முடியும். ஒவ்வொரு தாவர வகையும் பிராணிவகை ஜீவனும் வேறு தாவர ஜங்கம உயிர்களுக்கு ஆகாரமாய் முடியும் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அறிவோம். வேரூன்றி வளரும் செடி முதலிய உயிர்களும், ஊர்ந்தும் பறந்தும் நடந்தும் செல்லும் எல்லாப் பிராணி வகைகளும், தத்தம் உடல்களை ஒன்று மற்றொன்றுக்கு உணவாகவே உதவுகின்றன. இதுவே சிருஷ்டி அமைப்பு.

சிருஷ்டியிலுள்ள அனைத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றி, ஒன்றுக்கொன்று இன்றியமையாத சம்பந்தமுமாகின்ற இந்த "உணவு" என்னும் பொருளிலே பிரம்மத்தைக் காணலாம் என்பது உபதேசம்.

"அதோ அந்த மாமரத்தின் வடக்குக் கிளையைப் பார். அதன்மேலிருக்கும் ஏழு நட்சத்திரங்களுக்குப் பெயர் சப்தரிஷி. அதில் வால்போல் நீண்டு கிடக்கும் மூன்று நட்சத்திரங்களைப் பார்" என்று இவ்வாறு படிப்படியாகப் பையனுக்குச் சொல்லி, அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவதுபோல், உணவின் பேரி ரகசியத்தை விளக்கி, அதிலிருந்து படிப்படியாக பிரமத்தை முனிவர் உபதேசிக்கிறார்.

* * *

உலக சிருஷ்டியனைத்தையும் ஒன்றுக்கொன்று பிணைத்துக் கட்டும் உணவு என்ற சிறந்ததொரு பொருளை அலட்சியம் செய்யலாகாது. அதன் அருமையை அறிந்து மதித்தல் வேண்டும்.

"அன்னம் ந பரிசக்ஷீத தத்வ்ரதம்"

"உணவை எறியலாகாது; இது விரதம்." உணவு நன்ருயில்லை என்று தள்ளாதே. நன்ருயிருந்ததையும் அளவுக்கு மிஞ்சிப் பரிமாறிக் கொண்டு பிறகு எறியாதே. உணவை வீணுக்காதே. மிக அருமையான பொருளை அலட்சியம் செய்யலாவது, வெறுத்தலாவது ஒழுக்கமாகாது. உயிரைக் காப்பாற்றக் கூடிய உணவுப் பொருளைக்காட்டிலும் அருமையான பொருள் உலகத்தில் உண்டா?

இந்த முக்கியமான ஒழுக்க முறையை இப்போது நம் நாட்டில் ஜனங்கள் உணரவில்லை. பல்லாயிர வருஷங்களுக்குமுன் வேதாந்த ஞானத்தில் ஒரு பாகமாக உபநிஷத்திலுங்கூடச் சொல்லி விளக்கப்பட்டதாயினும், அதை இன்னும் கவனியாது மூடர்களைப்போல நாம் நடந்துகொள்ளுகிறும். வேண்டிய அளவுக்கு மேலும், வேண்டாதவைகளையும், வற்புறுத்தி வற்புறுத்திப் பரிமாறுவதும், வற்புறுத்துதலை எதிர்பார்ப்பதும், உணவு முடிந்து எறியும் இலைகளில் ஏராளமான தின்பண்டங்கள் கிடப்பதும் நம் நாட்டின் கெட்ட வழக்கமாகி வருவதைப் பார்க்கிறும்.

அன்னம் ந நிந்த்யாத் |
அன்னம் ந பரிசக்ஷீத ||

என்ற உபநிஷத்து உபதேசத்தை நாம் இப்போதாவது கவனித்து வழக்கத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

* * *

"உணவை ஏராளமாக உண்டாக்குவாயாக" என்றும் முனிவர் உபதேசம்.

"அன்னம் பஹு குர்வீத தத்வ்ரதம்"

"சோர்வு கொள்ளாதே. உனக்காக மட்டும் உணவு உண்டாக்கினல் போதாது. நாட்டுக்குப் பயன்படுமாறு உணவு ஏராளமாக உண்டாக்கு" என்கிறுர் முனிவர். இதைவிட உயர்ந்த பொருளா தார உபதேசம் என்ன வேண்டும்? சமுதாயத்திற்குச் செய்யும் பேருதவி; பொருளை உண்டாக்கும் முயற்சி களை எப்போதும் செய்வாயாக; சோர்வு வேண்டாம்; இதுவே ஒழுக்கம் என்பது உபநிஷத்து வாக்கியம்.

* * *

இவ்வாறு பொருளை உண்டாக்குவாயாக என்று உபதேசித்துவிட்டுத் தொடர்ந்தாற்போல் சொல்லு வதையும் கவனிக்கவேண்டும். பொருள் உண்டாக்கு வது உனக்காக அல்ல, மற்றவர்களுக்காக:

"ந கஞ்சந வஸதௌ ப்ரத்யா சக்ஷீத தத்வ்ரதம்"

அதாவது, "எவருக்கும் இடமில்லை என்று சொல்லா திருப்பாயாக, இதுவே ஒழுக்கம்." வந்த விருந்தின ருக்கு, இல்லை என்று சொல்லக்கூடாது. சோர் வின்றி முயற்சியைக்கொண்டு, ஏராளமான உணவுப் பொருளை உண்டாக்கி, அதை வீண் செய்யாமல் காப்பாற்றிவைத்தால், வந்த விருந்தினரை, போ என்று சொல்லவேண்டிய அவசியமிராது. பொரு ளில்லை என்ற தரித்திரத்தின் கஷ்டம் இராது. முயற்சியின் பயனுகச் செல்வம் படைத்து, சிக்கன

மாக வாழ்ந்தால், உலோபித்தனம் வந்து மனதைக் கவர்ந்துகொள்ளப் பார்க்கும். அது கூடாது. வந்த விருந்தினரைப் போ என்று சொல்லாதே; எவருக்கும் இடம் கொடுப்பாயாக; அதுவே ஒழுக்கம்—என்கிறார் முனிவர்.

எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால்,

உண்ணும் உணவில் குற்றம் காண வேண்டாம்.
ஏராளமாக உணவுப் பொருள் உண்டாக்கு.
உணவை வீணாக்காதே.
அனைவருக்கும் அன்னம் இடு.

என்பது உணவைப்பற்றி உபநிஷத்தின் உபதேசமாகும்.

# ஒரு பழைய கான்வொகேஷன் அட்ரெஸ்

ஒவ்வொரு வருஷமும் பி.ஏ. முதலிய கல்விப் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு ஒரு நீண்ட பிரசங்கம் சர்வ கலாசாலை மண்டபத்தில் நடைபெறும் வழக்கம் அனைவரும் அறிவார்கள். பழைய காலத்திலுங்கூடக் குருகுலவாசம் முடிந்ததும் ஆசாரியன் சீடனை வீட்டுக்கு அனுப்புமுன், வாழ்க்கைக் கிரமத்தைப்பற்றி ஒரு கடைசி உபதேசம் செய்வது வழக்கம் என்று தைத்திரீய உபநிஷத்திலிருந்து தெரியவருகிறது. அதில் ஓரிடத்தில், இத்தகைய பிரசங்கம் ஒன்றைக் காண்கிறோம். அதிலிருந்து அக்காலத்திய கல்வி முறையைக் கற்பனைக் கண்ணால் ஒருவாறு பார்க்கலாம்.

குருகுலத்தில் வசித்துவந்த சீடனுக்கு வேதம் ஓதுவித்து முடிந்ததும் குரு உபதேசிக்கிறார் :

ஸத்யம் வத: தர்மம் சர ||
ஸ்வாத்யாயான் மா ப்ரமத: ||
ஆசார்யாய ப்ரியம் தனம் ஆஹ்ருத்ய ப்ரஜா
தந்தும் மா வ்யவச் சேத்ஸீ: ||
ஸத்யான் ந ப்ரமதிதவ்யம் ||
தர்மான் ந ப்ரமதிதவ்யம் ||
குசலான் ந ப்ரமதிதவ்யம் ||
பூத்யை ந ப்ரமதிதவ்யம் ||
ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம் ||

தேவ பித்ரு கார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம் ॥
மாத்ரு தேவோ பவ
பித்ரு தேவோ பவ
ஆசார்ய தேவோ பவ
அதிதி தேவோ பவ ॥

* * *

"உண்மையைப் பேசு! அறத்தைச் செய்! குருவுக்கு நன்கொடை கொணர்ந்து கொடுத்த பின் சந்ததி என்ற நூல் அறுபட்டுப் போகாமல் காப்பாயாக! உண்மையினின்று வழுவாதே! அறத்தினின்று வழுவாதே! நலனைப் புறக்கணிக்க வேண்டாம். செல்வத்தைப் புறக்கணிக்க வேண்டாம். ஓதுதலும் ஓதுவித்தலும் மறக்க வேண்டாம். தேவர்களுக்கும் முன்னோர்களுக்கும் செய்யவேண்டியதை மறக்க வேண்டாம்.

"தாயைத் தெய்வமாகக் கருது
தகப்பனைத் தெய்வமாகக் கருது
ஆசார்யனைத் தெய்வமாகக் கருது
வந்த விருந்தினரைத் தெய்வமாகக் கருது"

"எந்தச் செயல்கள் குற்றமற்றனவோ அவையே நீ செய்யத்தக்கவை. மற்றவற்றைச் செய்யக்கூடாது. எங்களில் நீ கண்ட நன்னடத்தையைப் பின்பற்றுவாயாக; அல்லாதது ஒரு நாளும் வேண்டாம். எங்களைவிட மேம்பட்ட அந்தணர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஆசனத்தில் அமர்த்திக் கவுரவிப்பாயாக.

"கொடுப்பதைச் சிரத்தையுடன் கொடுக்க வேண்டும். அசிரத்தையாகக் கொடாதே. திருவுடன்

கொடுக்க வேண்டும். அடக்கத்துடன் கொடுக்க வேண்டும். பயத்துடன் கொடுக்கவேண்டும். அன்புடன் கொடுக்கவேண்டும்.

"செய்யும் கருமங்களிலேனும் நடக்கும் முறையிலேனும் உனக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டபோது, விவேகமும், தருமத்தில் பற்றும், இரக்கமும் கொண்ட அந்தணர்கள் அவ்விஷயங்களில் எவ்வாறு நடந்துகொள்கிறார்களோ அவ்வாறு நீயும் செய்வாயாக. விலக்கப்பட்ட விஷயங்களிலும் அவ்வாறே பெரியோர்களைப் பின்பற்றுவாயாக.

"இதுவே முறை. இதுவே உபதேசம். இதுவே வேதத்தின் பொருள். விளக்கம், இதுவே கட்டளை. இப்படி நீ நடப்பாயாக! இப்படியே நடப்பாயாக!"

* * *

ஒரு நாட்டில் கல்வி கற்றவர்கள் எல்லாரும் உண்மையே பேசி, தரும வழியில் நின்று, ஓதுதலை விடாமல், வாழ்க்கை நடத்தினார்களானால் பின் அந்த நாட்டுக்கு வேறென்ன வேண்டும்? இதுவே உபதேசத்தின் முதல் பாகம்.

குருகுல வாசம் முடிந்ததும், "குடும்ப வாழ்க்கையின் பொறுப்பு எடுத்துக் கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்? கவலையற்று இன்னும் படித்துக் கொண்டே சுகமாக இருக்கலாம்" என்று யோக்கியமான சீடர்களும் எண்ணக்கூடும். குருகுலக் கட்டுப்பாடும் நியமங்களும் முதலில் கஷ்டமாகத் தோன்றினும், வழக்கப்பட்ட பின் அதிலேயே மனம் ஈடுபட்டுப் போய், குடும்ப வாழ்க்கையின் பாரங்களும் கவலைகளும் வேண்டாம் என்று தோன்றுவது சகஜம். இக்

காலத்து மாணவர்களுள்ளும் இந்த மனப்பான்மை உண்டாவதைப் பார்க்கிறோம். இதையறிந்தே உபதேசத்தில், குருதக்ஷிணை கொடுத்து முடிந்ததும் "சந்ததி என்ற நூல் அறுபட்டுப் போகாமல் காப்பாயாக" என்று சொல்லுகிறார்; அதாவது, "விவாகம் செய்துகொண்டு உன் முன்னோர்களுடைய பரம்பரை அறுந்துபோகாமல் இல்லறம் நடத்து" என்று பொருள். விவாகம் செய்துகொள்வதில் நம் முன்னோர் அறிந்த பயன் இதுவே. காதல் இன்பமோ, உடல் உணர்ச்சி என்ற மிருகத்திற்கு செய்யும் பூஜைக் கிரமமோ அல்ல. விவாகமும் இல்வாழ்க்கையும், சமுதாயத்திற்கு நாமும் நம்முடைய குலமும் செய்யவேண்டிய சேவை உண்டு. அதைச் செய்வதற்குரிய பிரஜைகளை நிரந்தரமாக நாம் கொடுக்க வேண்டும் என்பதே.

* * *

உபதேசத்தின் அடுத்த பாகத்தில் சத்தியத்தையும் தருமத்தையும் வழுவாமல் கடைப்பிடித்து நலனும் செல்வமும் திரட்டு என்கிறார். ஆனால் அந்த வாழ்க்கையிலும் ஓதுவதும் ஓதுவித்தலும் மறக்கப்படாது என்று நினைவூட்டுகிறார்.

இரு முது குரவர், ஆசாரியர், விருந்தினர் இவர்களை தெய்வமாகக் கருதுதல் மிகப் பழைய பேச்சு. ஆயினும் இதுவே நம்முடைய நாட்டின் தனிச் சிறப்புக்கொண்ட விநய சம்பத்து. இது நம்முடைய தற்காலக் கல்வியால் பழுதுபட வேண்டிய அவசியமில்லை.

தரும முறையில் நடத்தப்படும் வாழ்க்கையில் கொடுப்பது என்பது ஒரு பெரிய அத்தியாயம். இதுவும் நம்முடைய நாட்டு விநயத்தில் இன்றியமையாத தனிச் செல்வம். கொடுப்பதைச் சிரத்தையுடன் கொடு; சிறப்பாகக் கொடு; இகழ்ந்தோ உதாசீனமாகவோ கொடாதே; கொடுக்கும் சக்தி உனக்கு வாய்த்தது என்று கர்வம் கொள்ளாதே; கொடுப்பதைப் பலர் அறிந்து மெச்சுமாறு டாம்பீகம் செய்யாதே. உன் கொடையைப் பெறுகிறவர்கள்பால் அன்பும் பயபக்தியும் கொண்டு நடந்து கொள்வாயாக என்கிறுர். கொடுப்பது என்பது பிச்சை ஒன்றேயல்ல. இவ்வித உபகாரமும் அதில் அடங்கும்; ஆகையால் இந்த எச்சரிக்கைகள் எல்லா விஷயங்களிலும் பொருந்தும்.

* * *

எது செய்யத்தக்கது, எது தகாது என்பதைப் பற்றி இந்த உபதேசத்தில் சொல்லியிருப்பது மிகவும் கவனிக்கத்தக்கது. ஐயம் தீர்ப்பதற்குப் பிரமாணம் நல்லோர் வாழ்க்கையே. அதிலும், அறவழியில் நிற்பது மட்டும் போதாது. நெகிழ்ந்த மனமுடைய பெரியோர்களேப் பின்பற்று என்ருர். தரும சாஸ்திர அறிவினுல் இரக்கமின்மை உண்டாவது ஓர் அபாயம். தருமப் பற்றும், தயையும் இரண்டும் கொண்ட அந்தணர்களின் வாழ்க்கை முறையைப் பார்த்து ஐயத்தைத் தீர்த்துக்கொள் என்ருர். கேட்டு அறிந்து அல்ல; அவர்கள் செய்வதைப்போல் நீயும் செய் என்ருர். மாணவர்களுக்கு எவ்வளவு அழகான பொன்போன்ற முடிவுரை!

# சீதையின் கனவு

சீதை அசோக வனத்தில் பல இரவுகள் கண் விழித்து, ஒரு நாள் தானும் அறியாமல், பாவம்! தூங்கி விட்டாள்.

* * *

அசோக வனத்தில் தவித்துக் கொண்டிருந்த காலத்தில் சீதைக்கு அடிக்கடி லக்ஷ்மணனுடைய ஞாபகமே வரும். என்ன காரணமோ, எப்போதும் இராமனை நினைத்துக் கொண்டிருந்தாலும்கூட அவள்முன் லக்ஷ்மணன்தான் அதிகமாக வந்து நிற்பதுபோலும், கண்களில் நீர் ததும்ப, "மன்னி! இப்படி நீ என்னைச் சொல்லலாமா?" என்று பேச்சில்லாமல் பார்வையினுலே சொல்லுவது போலும் தோன்றும். இதை அவளால் சகிக்க முடியவில்லை. சிறைப்பட்டுக் கிடக்கும் துக்கத்தைவிட இது அவளை அதிகமாக வருத்திற்று. "ஐயோ! தம்பியைச் சொல்லக்கூடாத சொல்லைச் சொல்லி ஒரு குற்றமுமறியாத அவன் மனதை நோகச் செய்தேனே! அரக்கன் என்னைத் தூக்கிவந்த பாவத்தைவிட, தம்பிக்கு நான் செய்த பாவமே பெரிது!" என்று அடிக்கடி எண்ணியெண்ணிப் பரிதபிப்பாள்.

இவ்வாறு நினைந்து நினைந்து வருந்தி வந்தபடியால் அவள் அன்று கண்ணயர்ந்தபோது கனவில் திடீர் என்று லக்ஷ்மணன் அசோக வனத்தில் வந்து குதித்ததுபோல் கண்டாள்.

* * *

லக்ஷ்மணனைக் கண்டதும் சீதைக்கு ஒரே சந்தோஷப் பரவசம், தாங்க முடியவில்லை.

" ஆ! வந்தாயா, தம்பி? நான்பட்ட கஷ்டமெல்லாம் கனவா?" என்று ஆனந்த பாஷ்பம் சொரிந்தாள்.

"வந்துவிட்டேன், மன்னி! இனி பயமில்லை, துயரமில்லை, நீ என்ன கஷ்டங்கள் அனுபவித்தாய்? நான் உன்னை விட்டுப்போனதும் பெரும்பாவம். நீ என்னை மன்னிக்கவேண்டும்" என்றான் லக்ஷ்மணன்.

பிறகு சிரித்துக்கொண்டு, "ஆனாலும் மன்னி! நீ என்ன மூர்க்கம் செய்துவிட்டாய், எவ்வளவு ஆபத்தாயிற்று!" என்றான்.

லக்ஷ்மணன் அப்போது சிரித்த சிரிப்பின் அழகை யார் வருணிக்க முடியும்? காலைப் பனிமேல் சூரிய கிரணம் பட்டுக் கரைந்துபோகும் காட்சியைப்போல் துக்கமும் கண்ணீரும் சிரிப்பும் சந்தோஷமும் கலந்த அந்த அழகை எப்படி எழுத முடியும்?

" நான் செய்தது தவறுதான், தம்பி. ஆனால் நீ என்னை அப்படித் தனியாய் விட்டுவிட்டுப் போகலாமா? நான் என்னதான் திட்டினாலும், நீ அண்ணனுக்குச் செய்த பிரதிக்ஞை தவறலாமா? நான்தான் புத்தி கெட்டுப்போய் வாயில் சொல்லக்கூடாத பேச்சைச் சொன்னேன். அதற்காக நீ உன் அண்ணனுக்குக் கொடுத்த வாக்கை மீறலாமா?" என்றாள் ஜானகி.

* * *

"என்ன வாக்கு? எந்தப் பிரதிக்ஞை? இராம னுக்கு ஏதாவது நீ வாக்குத் தந்ததுண்டா? நான் கேள்விப்படவில்லையே?" என்றார் நாரதர்.

["நாரதர் இப்போது எங்கே வந்தார்?" அவரைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?" எனலாம் வாசகர். கனவில் நடக்கும் சம்பவங்களைப் பற்றி இவ்வாறெல்லாம் கேள்விகள் கேட்கக்கூடாது. நாரதர் எப்படியோ வந்து சேர்ந்தார். அது அவருடைய வழக்கம். இது புராணம் படித்தவர் களுக்கெல்லாம் தெரியும்.]

"வாக்குக் கொடுக்கவில்லையா? இதென்ன இப் படிப் பெரியவர் நீரும் பேசுகிறீர்?" என்றாள் சீதை. சீதைக்கு நாரதரைக் கண்டால் என்ன பயம்!

சீதை கேட்டதற்கு நாரதர், "நீ ஏவியதும், தம்பியை இங்கே இரு என்று சொல்லிவிட்டு அண்ணன் ஒரே ஓட்டமாய் மானைத் தொடர்ந்து போய்விட்டான். தம்பி சொல்லும் பதிலுக்குக்கூட இராமன் தாமதிக்கவில்லை. லக்ஷ்மணன் தம் வாயால் ஒரு பிரதிக்ஞையும் செய்யவில்லையே?" என்றார்.

இதைக் கேட்டதும் லக்ஷ்மணன் சிரித்து, "இப் படியெல்லாம் வாதிப்பது எனக்குப் பிடிக்கவில்லை, இது ஒருவேளை ரிஷிகளுக்குச் சரியாயிருக்கலாம். நான் க்ஷத்திரியன், எனக்குப் பொருந்தாது. 'இரு' என்று அண்ணன் சொல்ல, நான் குடிசை வாயிலில் நின்றதே பிரதிக்ஞை" என்றான் லக்ஷ்மணன்.

"இவனை நம்பியல்லவோ, அவர் போய் விட்டார்?" என்றாள் சீதையும்.

" நீங்கள் இருவரும் இவ்வளவு சுலபமாக ஒப்புக் கொண்டால் எனக்கென்ன ஆட்சேபணை ? உங்கள் பாடு " என்றார் நாரதர்.

* * *

"நான் திட்டிவிட்டால் உனக்கு என்ன நேர்ந்து விட்டது!" என்றாள் சீதை. "ஏன் ஊரை விட்டு அரண்மனையை விட்டுக் காட்டுக்கு வந்தோம். சத்தியத்திற்குப் பயந்து அல்லவா? பிரதிக்ஞையைக் காப்பாற்றவல்லவா ? பரதன் சொன்னதையும் மறுதளித்து, ஊரார் சொன்னதையும் நிராகரித்து வனவாசம் கொண்டது பிரதிக்ஞையைக் காப்பாற்றவல்லவா ?" என்றாள்.

" பொறுக்க முடியாத சொல்லைச் சொல்லி என் இதயம் துடிக்கச் செய்தாயே ?" என்றான் லக்ஷ்மணன், கொஞ்ச நேரம் பொறுத்து.

" ஊரெல்லாம் திட்டினாலும் நீ இடத்தை விட்டு நகரலாமா ?" என்றாள் சீதை.

" ஆம், மன்னி, நீ சொல்வது சரியே. அன்று உன்னை விட்டுப்போய்ப் பாதி வழி நடந்ததும் எனக்கும் அப்படித்தான் தோன்றிற்று. மன்னி திட்டினால் அது என்னை என்ன செய்யும் ? அண்ணனுக்குக் கொடுத்த வாக்கல்லவா பெரிது என்று திரும்பினேன். பத்து அடி குடிசையை நோக்கிச் சென்றேன்......"

இப்படி லக்ஷ்மணன் திரும்பினபோது பர்ணகுடியில் சந்நியாசி வேஷம் தரித்த இராவணன், சீதை அளித்த பழத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்

தவன் திடீர் என்று நடுக்கம் கொண்டான். அவன் இடது கண்ணும் இடது கையும் துடித்தன. பழத்தை இலையில் வைத்து, வாசலை நோக்கிப் பார்த்தான். லக்ஷ்மணன் வந்துவிடுவான், ஓட்டம் பிடிக்க வேண்டும் என்று பயந்தான்.

"பயப்படாதே!" என்றார் நாரதர். இந்தப் பொல்லாத ரிஷி மறுபடியும் எப்படியோ வந்து கலந்து கொண்டார்!

[இதென்ன கதை புது தினுசாக இருக்கிறது. கோர்வை இல்லாமல் உளறலாக இருக்கிறது. அசோகவன மெங்கே, பர்ணகுடி எங்கே என்றெல் லாம் ஆட்சேபிக்க வேண்டாம். கனவு; அதிலும் மகா சோகத்தில் மூழ்கியிருந்த சீதையின் கனவு. அதற்கு வரையும் முறையும் கிடையாது. தவிர குழந்தைகளுக்காக நான் சொல்லும் கதை பெரிய வர்கள் படிக்கவேண்டியதில்லை.]

பத்து அடி நடந்தேன், குடிசைக்குத் திரும்பிப் போக. மறுபடியும் மன்னி, உன் சிவந்த கண்களும், கோபத்தால் சுருங்கிய நெற்றியும் என் கண்முன் வந்து நின்றன. 'ஆ! வந்து விட்டாயா துஷ்டா!' என்று காளியின் அவதாரமாக நீ சீறிப் பாய்ந்தது போல் கண்டேன். அண்ணனுக்குக் கொடுத்த பிரதிக்ஞை தூர ஓடிப்போய்விட்டது. நீ சொன்ன வார்த்தைகளும், என் அகங்காரமும் என்னைக் கவர்ந்து என் புத்தியை மயங்கச் செய்தன. எவ் வாறாயினும் ஆகட்டும், மானமல்லவோ பெரிது என்று பல்லைக் கடித்துக் கொண்டு மாய மானைத் தொடர்ந்து சென்றேன்.

"ஐயோ! கெட்டதே குடி!" என்ருள் சீதை. "அப்போது நீ வந்திருந்தால் நான் பிழைத்திருப் பேனே!" என்றழுதாள்.

* * *

"நடந்தது நடந்து விட்டது, இப்போது கிளம்பு. போவோம்! இனி பழைய துக்கம் என்னத் திற்கு? நான்தான் வந்து விட்டேனே?" என்ருன் லக்ஷ்மணன்.

"தம்பி! உனக்கு எவ்வளவு பெரிய அநியாயம் செய்தேன்! இதற்கு எவ்வாறு பிராயச்சித்தம்?" என்று பரிதபித்தாள் சீதை.

"கிளம்பு, கிளம்பு!" என்று லக்ஷ்மணன் சொல்லிச் சீதையைத் தட்டினுன்.

* * *

கனவில் இவ்வாறு தட்டினதும் சீதை விழித்துக் கொண்டாள். லக்ஷ்மணனுமில்லை, நாரதருமில்லை. சுற்றிலும் அரக்கிகள்! அவர்களில் ஒருத்தி, "எழு! எழு! என்ன உறக்கம்? இராவணேசுவரன் வரு கிருன். அதோ ஒலிக்கிறது சங்கு! அவன் சொல்லுகிறபடி செய். மூர்க்கம் பிடிக்காதே! இராமனும் லக்ஷ்மணனும் கடலுக்கு அப்பால் அலைந்து கொண்டிருக்கிருர்கள். அவர்கள் இவ்விடம் வர ஒரு நாளும் முடியாது. நீ இராவணன் மனைவி தான்! சந்தோஷமாய் ஒப்புக் கொள். வந்த சௌபாக் கியத்தை ஏன் வேண்டாம் என்று தள்ளி வாழ்நாளை வீணுக்கிக் கொள்ளுகிருய்?"

"ஆ!" என்று கதறினுள் சீதை. மரமும் செடி யும் பெருமூச்சு விட்டன.

* * *

இதற்கு மறுநாள்தான் அனுமான் கடலை ஒரே தாண்டாகத் தாண்டி இலங்கை வந்து சேர்ந்தான். அனுமான் வருவதற்கு முன் சூசனையாக இந்தக் கனவைச் சீதை கண்டாள். இம்மாதிரி சில சமயம் வரும் சம்பவங்களைக் கனவில் முன்னால் காண்பது உண்டல்லவா? அனுமானுக்குப் பதில் லக்ஷ்மணனைக் கண்டாள். சீதைக்கு அப்போது அனுமானைத் தெரியாதல்லவா?

பிறகு அசோகவனத்தில் நடந்த கதை எல்லாருக்கும் தெரியும். அனுமான் யார் என்பது தெரிந்ததும், சீதை முதல் முதலில் கேட்ட கேள்வி, "லக்ஷ்மணன் சௌக்கியமா?" என்று. அதன் பிறகுதான் புருஷனைப் பற்றி க்ஷேம சமாசாரம் கேட்கலானாள். லக்ஷ்மணனுக்குத் தான் செய்த அநியாயத்திற்காகச் சீதை வருத்தப்பட்டது, அவளைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. யாரிடமும் சொல்ல முடியாத வருத்தமே கொடிய வருத்தம் அல்லவா?

சிரித்து விளையாடுவதற்குப் பதிலாக சீதை பட்ட துக்கத்தையெல்லாம் நினைத்து நாம் வருத்தப்பட வேண்டியதில்லை. அவளுடைய துக்கத்துக்கு விமோசனம் கொண்டுவந்த அனுமான் இருக்க நாம் யாரும் துக்கப்பட வேண்டிய அவசியமில்லை. அனுமானை "சிரஞ்சீவி" என்கிறார்கள் பெரியோர். அதாவது இப்போது எங்கேயும் நமக்கு உதவக் காத்திருக்கிறான். எந்தக் கஷ்டம் நேர்ந்தாலும் எந்தத் துக்கம் ஏற்பட்டாலும் ராம, ராம என்று சொல்லிக்கொண்டு பொறுப்போம். அனுமான் வந்து நிவாரணம் செய்வதில் சந்தேகமில்லை.

# சித்தக் கோளாறுகள்

பேய், பிசாசு, காற்று, கறுப்பு என்று பலவிதப் பெயர்கள் தந்து, வேப்பிலையும் மந்திரமும் அம்மன் பூஜையும் செய்து தீர்க்கப் பார்க்கும் வியாதிகளைப் பற்றி, அனைவருக்கும் தெரியும் அல்லவா? இவை யெல்லாம் மனித தேகத்தில் வேலை செய்துவரும் சித்தப் பொருளுக்கு ஏற்பட்ட நோய்நிலை. உடலுக் குள் கண்ணுக்குப் புலப்படாமல் வேலைசெய்யும் ஒரு பொருள் உண்டு. அதற்குப் பெயர், சித்தப் பொருள் என்று வைத்துப் பேசலாம்.

இந்தச் சித்தப் பொருள், உடலில் மறைந்து நின்று, மனிதனுடைய எல்லாக் காரியங்களையும் நடத்திவருகிறது. அது நமக்குத் தெரிந்தும் தெரி யாமலும் உடலில் சதா வேலை செய்து வருகிறது. உடலுறுப்புகளிலும் தசைகளிலும் சீர்கேடுகள் உண் டாகி நோய்கள் தோன்றுவதைப்போல், இந்தச் சித் தப் பொருளிலும் சில சமயம் சீர்கேடு ஏற்படுகிறது. அப்போது பலவித நோய்கள் உண்டாகின்றன. அவற்றைச் சமாளிக்க, சாதாரண உடல் வைத்திய முறையில் வழி இல்லை. அந்த நோய்களின் போக்கே வேறு. வெகு வியப்பான நிகழ்ச்சிகளும் கஷ்டங் களும் நேரிடும்; வியப்பான முறையில் இவை தீர்ந்து போய்ச் சொஸ்தப்படுவதும் காணலாம்.

சித்தப் பொருளின் சீர்கேட்டைப் பற்றியும் அதற்குச் செய்யவேண்டிய வைத்திய முறையைப் பற்றியும், நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆனால், இன்னும் அதைப்பற்றிச் சரியான அளவில் விளக்கம் ஏற்படவில்லை.

சித்தப் பொருள் என்பதை, ஒரு நீரோட்டம் போல் வைத்துக் கொள்ளலாம். உடலின் ஆரோக்கிய நிலைக்கு, சரியான ரத்த ஓட்டம் எவ்வளவு முக்கியமோ அதைப்போல், சித்தப் பொருளின் சம ஓட்டமும் இன்றியமையாததாகும். அதில் சுழிகளும் அலைகளும் ஏற்பட்டால், சீர்கேடு உண்டாகி விடுகிறது.

ஆசை, விருப்பங்கள் ஒரு போக்காகச் செல்லாமல் முரண்பாடுகள் உண்டானால், மனிதனுடைய உள்ளத்தில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. சித்தப் பொருளில் அளவுக்கு மிஞ்சிச் சங்கடங்கள் தோன்றினால், சித்தப் பொருள் சீர்கேடு அடைகிறது. ஓரளவு இத்தகைய கோளாறுகளைத் தாங்கும் சக்தி அதற்கு உண்டு. இந்த வரம்பு, ஆளுக்கு ஆள் வித்தியாசப் படும் ; வயதுக்கும் நிலைமைக்கும் தகுந்தபடி வேறு படும். ஆயினும், வரம்பு மீறிய முரண்பாடு ஏற்பட்டால், சித்தப் பொருளின் ஆரோக்கிய நிலை கெட்டுப்போய், 'பேய்' பிடித்துக்கொள்ளும்.

* * *

முதலில் இதன் சின்னங்களைக் கவனிக்கலாம். சித்தப் பொருள் சரியான முறையில் விஷயங்களைக் கிரகிப்பதும் யோசிப்பதும் குறையும் ; தெளிவு மங்கும் ; துயரமும் தாபமும், காரணமின்றித்

தோன்றும். இவையெல்லாம் வியாதியைத் தீர்த்துக் கொள்ள, சித்தப் பொருள் செய்யும் முயற்சியே யாகும். ஆயினும், அவை நோயாளிக்குப் பெருந் தொந்தரவும் துன்பமுமாகக் காணப்படும்; செரிக் காத உணவுப் பொருளைத் தின்ருல் வயிற்றிலும், அடிபட்டுக் கால் எலும்பு முறிந்தால் காலிலும் வலி உண்டாவது போல், பொறுக்கமுடியாத வலி உண்டானுல்தான், மனிதன் உள்ளே நிகழ்ந்த சீர் கேட்டைக் கவனிப்பான். வலி என்பது இல்லை யானுல், உடலில் ஆரோக்கியமே இராது; எல்லாம் கெட்டுக்கொண்டே போய், அழிந்துவிடும்.

உள்ளத்தில் உண்டாகும் கருத்து முரண் பாடுகள், அநேகமாகத் தாமாகவே சீர்பட்டுச் சமநிலை உண்டாகிவிடும். முரண்பாட்டின் தன்மைக்கும், சங்கடப்படும் ஆளின் வயது, மனேநிலை முதலியவை களுக்கும் தக்கவாறு, இந்தத் திருத்தம் நடைபெறும். சிறு விசனங்களை, குழந்தைகள் வெகு சீக்கிரத்தில் மறந்துவிடும். மறதியே அவைகளுக்கு வைத்தியம். மறவாத விசனங்கள், சித்தக் கோளாறுகளை உண் டாக்கும். ஓர் இராத்திரி தூங்கிவிட்டால், குழந்தை களுக்கு ஏற்பட்ட சித்தப் பொருளின் சுழிகளும் அலைகளும் அநேகமாக அடங்கிவிடும். சங்கடத் துக்குக் காரணமான பொருளை, பெற்ருேர்கள் நீக்கி விட்டாலும், சங்கடம் சீக்கிரத்தில் மறந்துபோகும்; தோஷம் ஒன்றும் மிஞ்சி நிற்காது. ஆயினும், சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் சில சங்கடங்கள், யாருக் கும் தெரியாமல் அடக்கப்பட்டு, ஒழிந்துபோகாமல் மறைந்து நின்று, பிறகு வெகுநாட்கள் கழித்து,

வயது வந்தபின், பலவிதச் சித்தக் கோளாறுகளாக வடிவங்கொண்டு, வெளிப்படுவதுமுண்டு.

குழந்தைப் பருவம் முடிந்தவர்களுக்குச் சித்தத்தில் நிகழும் முரண்பாடுகளை, எவ்வாறு அவர்கள் தீர்த்துக் கொள்கிறார்கள் என்பது, அநேகமாக அவரவருக்கேதான் தெரியும்; பிறருக்குத் தெரிய மாட்டாது. சரியான முறையில் தீர்த்துக்கொண்டால், ஆரோக்கிய நிலை உண்டாகும். தவறான முறையில் சங்கடத்தைத் தீர்த்துக்கொண்டு வெளித்தோற்றத்துக்கு மட்டும் சமாதானம் உண்டாக்கிக் கொண்டு போனால், சித்தக் கோளாறு நிச்சயம் உண்டாகும். சங்கடங்கள் நேர்ந்தால், வரம்புகடந்த அடக்குமுறை, மதுபானம் போன்ற சாதனங்களைக்கொண்டு அவைகளைத் தீர்த்துக்கொள்ளப் பார்ப்பது தவறு.

* * *

சிலர் தங்களுக்கு ஏற்பட்ட சங்கடத்தைத் தாங்க மாட்டாமல், பந்துக்களுடனும் சிநேகிதர்களுடனும் சேர்ந்து கலப்பதை விட்டுவிட்டு, வாழ்க்கையிலேயே வெறுப்புக்கொண்டு விடுகிறார்கள். ஒரு பெண்ணுக்கு ஏதேனும் அங்கஹீனம் அல்லது உடல் கோளாறு இருந்தால், அதனால் அவள் யாருடனும் சேராமல் தனியாகவே இருக்க விரும்புவது இந்த வகையைச் சேர்ந்தது. எல்லாரும் நல்ல உடைகளும் ஆபரணங்களும் போட்டுக் கொண்டிருக்க, தனக்கு அவை இல்லையே என்று ஏங்கி, மற்றவர்களோடு சேராமல், எல்லார் பேரிலும் சில குழந்தைகள் வெறுப்புக் கொள்வது உண்டு. தைரியம் தந்துகொண்டு, உண்மையைச் சரியாகக் கண்டு, சங்கடத்தைச் சமாளித்துக் கொண்டால்தான் நன்மையே அல்லா

மல், இம்மாதிரி சமூக வாழ்க்கையை விட்டுத் தனிப் பட்டு ஒடுங்குவது தவறு. கோளாறு உண்டாவதற் கான காரணந்தான் அதனுல் பலப்படும்.

சமூகத்திலே இருந்தவண்ணம் தன் சங் கடத்தை அடக்கி அடக்கி, வெளியில் காட்டாமல் மறைத்துவைத்துக்கொண்டு, கஷ்டத்தைத் தீர்த்துக் கொள்ளாமல், உள்ளே குடைந்துச் சித்தப் பொருளை நோய்படச் செய்வதும், கோளாறில்தான் முடியும். ஒருவனை விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்று ஒரு பெண்ணுக்கு ஆசை. சில காரணங்களினுல் அது மற்றவர்களுக்குச் சம்மதமாயிராது என்று பயந்து, அந்த ஆசையை நீக்கிக் கொள்ளாமல், ஆனுல் வெளியில் காட்டாமல், உள்ளே மூடி அடக்கி வைப்பது இந்த வகையில் சேர்ந்தது.

ஒரு பொருள் வேண்டும் என்று ஆசை. ஆனுல், அது தன் பெற்ருேருக்கோ, இனத்தாருக்கோ சம்மதமாயிராது என்று அடக்கிவிட்டு, சமாதான மின்றி, பேசாமல் இருப்பது. ஆயினும், அந்த விருப்பம் கொடிய தீவிரத்துடன் உள்ளே வேலை செய்துகொண்டே இருக்கும்—இதுவும் இந்த அடக்குமுறை வகையில் சேரும்.

மற்றப் பெண்கள் காலேஜ் சென்று இங்கிலீஷ் படிக்கும்போது, தான் மட்டும் வைதீக முறையில் கட்டாயமாக அழுத்தப்பட்டுக் கிடப்பதா என்று சங்கடப்படுவது ; ஆயினும், அதைப்பற்றிப் பேசாமல் இருப்பது—இதுவும் ஓர் உதாரணமாகும்.

பள்ளிக்கூடத்தில் சரியாப் 'பாஸ்' ஆகிறதில்லை. தேருத பிள்ளைகளில் சிலர் தீவிர உணர்ச்சி படைத்த

வர்களாயிருப்பதுண்டு. இத்தகைய பிள்ளைகள், உள்ளத்தில் யாருக்கும் தெரியாமல் நிரம்பச் சங்கடப்படுவார்கள். வெட்கப்பட்டு அடக்கி அடக்கி, பள்ளிக் கூடத்தை விட்டு விட்டு ஓடிப்போய், தான்தோன்றியாகக் கெட்டுப் போவதும் உண்டு. தொழிலில் சாமர்த்தியம் போதாது என்று பலர் சொல்வதைப் பொறுக்கமுடியாமல், சிலர் எங்கேயாவது ஓடிப்போய் மறைந்து அலைவது உண்டு. குடும்பவாழ்க்கை நடத்த முடியாமல், மனைவியை விட்டு விட்டுச் சிலர் தனியாக வாழப்போவதுண்டு.

இவையெல்லாம், சங்கடங்களைச் சமாளிக்கப் போதிய தைரியம் இல்லாததனால் உண்டாகும் நிகழ்ச்சிகள். இதற்குப் பதிலாக, சில சமயம் சித்தப் பொருள் உள்ளே சீர்கேடு அடைந்து விடுவதும் உண்டு. அதாவது, ஆள் ஓடி மறைவதற்குப் பதிலாக, சித்தப் பொருள் ஓடி மறைய ஆரம்பிக்கிறது! யுத்தத்தில் சேர்ந்த பலருக்கு, தாங்கமுடியாத திகில் பிடித்துக்கொள்ளுகிறது. அந்தச் சமயத்தில் தைரியம் சம்பாதித்துக்கொண்டு சமாளிப்பதற்குப் பதிலாக, சிலர் சித்தப் பிரமையை அடைகிறார்கள். உடல் சிறைப்பட்டாலும், சித்தத்தைச் சிறைப்படுத்த முடியாது. அது தன் பாட்டுக்குக் கோளாறுகளைத் தேடிக்கொள்ளும்.

* * *

சங்கடங்கள் ஏற்பட்டால், சிலர் அதை மறக்க வேறு காரியங்களில் ஈடுபட்டு உடலை வருத்தி வரம்பு கடந்த சிரமத்தில் முழுகுவார்கள்; எல்லாவிதக் காரியங்களிலும் இயக்கங்களிலும் தீவிரப் பரபரப்

புடன் கலந்துகொண்டு, தம்மையும் மறக்கப் பார்ப்பார்கள். சிலருடைய பொதுத் தொண்டுகளுக்கு இது காரணமாகும்.

இவையெல்லாம் போக, சர்வசாதாரணமாக நிலவும் ஒரு தவருன முறை உண்டு. சங்கடங்களைத் தீர்த்துக் கொள்ள மதுபானம், அபினி, கஞ்சா முதலிய போதைப் பொருள்களைக்கொண்டு அறிவீனர்கள் தங்கள் கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்ளப் பார்ப்பார்கள். முடிவில் அந்தச் சாதனங்களுக்கே தாங்கள் இரையாவார்கள். முதலில் சந்தோஷம் உண்டாகிறது; சங்கடங்கள் தீர்ந்து சமநிலை உண்டாவது போல் தோன்றுகிறது. பிறகு, குடிப்பழக்கத்துக்கே அடிமையாகி, இருந்த சங்கடங்கள் குறைவதற்குப் பதிலாக, இன்னும் அதிகமாக அவை பெருகும்.

* * *

தான் படைத்த அறிவைக்கொண்டு சங்கடங்களைத் தீர்த்துக்கொள்வதே சரியான முறை. என்ன காரணங்களினுல் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, எந்தத் தடைகளினுல் விருப்பம் நிறைவேருமலிருக்கிறது, விரும்பும் பொருளின் தன்மை என்ன என்பவை போன்ற விஷயங்களைக் கலவரம், மோகம், பரபரப்பு ஆகியவை இன்றிச் சரியாக யோசித்து, தான் செய்ய வேண்டியது என்ன என்று ஒரு முடிவு பண்ணி, அதைச் செய்வதே சரியான முறை. தைரியமும் அறிவும் கொண்டு சங்கடங்களைச் சமாளிக்க வேண்டுமே யொழிய, அவைகளைக் கண்டு பயந்து ஓடக் கூடாது; ஒளித்து மறைக்கக் கூடாது; அல்லது மறக்க மதுபானம் அருந்தி வழக்கப் படுத்திக்கொள்

ளவும் கூடாது. தவறு நடந்தால் அதை ஒப்புக் கொள்வதும், பிழையைக் கூடிய அளவில் திருத்தும் முயற்சி யெடுப்பதுமே, நேரான வழி. அதற்குப் பதிலாக, பிறர்மேல் பழி சொல்லுவதும் தன் பிழையை மறைக்கப் பார்ப்பதும் அதிகமான சங்கடங் களுக்கே இடமாகும். முக்கியமாக, எந்தச் சங்கடத் துக்கும் மதியும் தைரியமுமே சஞ்சீவியைப் போன்ற மருந்து. வேறு குறுக்கு வழியில்லை; மூடி வைத்தும் பயனில்லை. குழந்தைகள் வாலிபப் பையன்கள், பெண்கள், வயது வந்தவர்கள், பெரியோர்கள், சிறி யோர்கள் ஆகிய அனைவருக்கும், சங்கடங்களைத் தீர்க்கும் மருந்து, மதியும் தைரியமுமே ஆகும்.

* * *

பெண்களுக்கு ஆண்களைவிட நரம்பின் இழை மிகவும் ஸன்னம். இதனால், அவர்களுடைய உணர்ச்சிகளின் நயமும் அதிகம்; அபாயமும் அதி கம். வாத்தியக் கருவியில் உள்ள பஞ்சமத்தின் கம்பியைப்போல், சுருதியும் மேலேதான் இருக்கும்; சுலபமாக அறுபட்டும் போகும். இதனால்தான், சித்தக் கோளாறுகள், பெண்களுக்கு அதிகம். ஆனால், அனைவருமே இந்த வியாதியை அடையக் கூடும். வியாதியின் தன்மை பொதுவானதேயாகும்.

# ஒரே வழி

நம்முடைய தேசிய, சமூக வாழ்க்கையைப் பாதிக்கும் விஷயங்களெல்லாம், அவைகள் நல்லதோ, கெட்டதோ எதுவாயிருந்தாலும் சரி, நம் மனத்திலே ஆழப் பதிந்திருக்கின்றன. இவைகளைத் திருத்தி விடலாமென்றோ, அடக்கிவிடலா மென்றோ நாம் நம்புகிறோம். புற வளர்ச்சிகளெல்லாம், இயற்கைச் சட்டங்களின்படி நடக்கின்றன. இவைகளை நாம் மாற்ற முடியாது. மனிதனின் மனத்தைத்தான் நம் சக்திக்குள் அடக்கமுடியும்; இதைச் செய்துவிட்டோமானால், மற்றவை தாமாகவே சரியாகிவிடும்.

மனிதனின் நடத்தை அவனுடைய மனத்தை அநுசரித்தே இருக்கிறது. மனம் ஒரு குறிப்பிட்ட போக்கில் சென்றாலோ, அல்லது மாறுபாடு அடைந்தாலோ, நடத்தையின் போக்கை மாற்ற எதாலுமே முடியாது. இயற்கைக்கு முரண்பட்டவைகளைப் பெறச் செய்கிற பிரயத்தனங்கள் எல்லாம் தோல்வியில்தான் முடியும். வற்புறுத்திச் சொன்னால், இதை யாரும் ஒப்புக்கொள்வார்கள்; ஆனாலும், அதே சமயத்தில் நாம் தினந்தோறும் நியதியை மீற முயன்றுகொண்டுதான் இருக்கிறோம். பலாத்காரத்தையே சிந்திக்கிறோம்; விரோதிகள், நண்பர்கள் இருவரையும் உள்ளிட்ட மற்றவர்களையும், பலாத்

காரத்தைச் சிந்திக்க வழி காட்டுகிறோம்; அதே சமயத்தில், ஒழுங்கும் சமாதானமும் நிலவவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். ஒழுங்கின்மை தலை காட்டும்போது, நமக்குப் பெருத்த விசனமும், ஏமாற்றமும் ஏற்படுகின்றன; ஆனால் இந்த ஒழுங்கின்மைக்குக் காரணம் நம் தவறுகள் தாம்.

அப்போது, எதுதான் மனிதனுடைய மனத்திற்கு நாம் விரும்புகிற உருவையும், போக்கையும் அளிக்க முடியும்? நம்முடைய முன்னேற்றத்துக்கு ஒரே ஒரு விஷயம்தான் தேவையாயிருக்கிறது; அது அறிவன்றி வேறில்லை. மேலும் மனிதனுடைய மனம் உருவாக்கி கொண்டிருக்கும் சமயத்தில் அறிவுப் பயிற்சி வேண்டும்; அதற்குப் பின்னர், சற்றுக் குறைந்த அளவில் வாழ்க்கை முழுவதிலும் அறிவுப் பயிற்சி தேவை.

பாலர்களுக்கோ, முதியவர்களுக்கோ, எழுதப் படிக்கத் தெரிந்துவிடுவது அறிவு ஆகிவிடாது. பள்ளிக்கூடத்தில் வாசிப்பதன் மூலம் எழுத்தறிவைப் பெற்று விடலாம்; ஆனால், எழுத்தறிவு உள்ள மனிதனுக்குக்கூட உண்மையான அறிவு தேவையாயிருப்பது உண்டு; அநேகமாக அப்படித்தான் இருக்கிறது. விஷய ஞானம் என்பதும் அறிவு ஆகாது; நேர்மையாகச் சிந்தனை செய்வதும், உண்மையைப் பேணிப் போற்றுவதும்தாம் அறிவு. இந்த விதமான அறிவையும் அளிக்கக் கல்லூரிகளும் பள்ளிக்கூடங்களும் முயலுகின்றன. ஆனால், நம் நாட்டின் முப்பது கோடி ஆண் பெண் மக்களுக்கு இந்த அறிவை வழங்குவதில் அதிகச் சிரத்தை

418407
9
MADURAI UNIVERSITY LIBRARY

காட்டுவது மதம்தான். இந்தக் கோடிக் கணக்கான ஆண் பெண் அனைவரும், சரியாகச் சிந்தித்து, விஷயங்களின் தராதரத்தைச் சரியாக மதிப்பிடு கிறார்கள். அநேகம் பேர்கள் இதை அறியவோ, ஒப்புக்கொள்ளவோ முன்வருவதில்லை.

கலாசாலைகளும், கல்லூரிகளும் நமக்குப் பல நன்மைகள் புரிந்திருக்கின்றன. ஆயினும் நம் மனம் பண்பட்டுச் சீரிய முறையில் அமைவதற்குக் கல்லூரிப் புத்தகங்களையும் ஆசிரியர்களையும்விட, நம்முடைய மதமே பெரிதும் துணை புரிகிறது.

மதத்தின் பெயரில், நம்மிடையே எவ்வளவோ கோட்பாடுகளும், கர்வமும், அசூயையும் நிலவுகின்றன. ஆனால், நான் குறிப்பிடுவது இதை அல்ல. மதத்தினுடைய உண்மையான அர்த்தத்தை நாம் தெரிந்து கொள்ளவில்லை.

நமக்கிருக்கும் தொந்தரவுகளுக் கெல்லாம் காரணம் மதம்தான் என்று சிலர் சொல்வார்கள்.

இந்த முடிவு, அசுத்த நீரை வலிய உட்கொண்டு உடல் நலம் குன்றினால், அந்த நீரையே குறை கூறுவதை ஒக்கும்.

தண்ணீரிலுள்ள அசுத்தம்தான் எல்லா நோய்களுக்கும் காரணமா யிருக்கிறது. ஆனால் இந்தக் காரணத்திற்காக, மனிதன் தண்ணீரையே ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா? இதே போல், பொருள்களின் தராதரத்தைப் பகுத்தறியும் நிலையான உணர்வு தவிர்க்க முடியாத ஒன்று. அது யாதெனில், தனி மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலக மக்களிடம்

நடந்துகொள்ளும் முறையும், அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமான, புலனறிவுக்குப் புலன்படாத ஆண்டவனிடத்தில் காட்டும் பக்தியும்தான். இதற்குத்தான் மதம் என்ற பெயரைக் கொடுத்துத் தத்துவ விசாரதர்களும்—அவர்களைக் காட்டிலும் அதிகமாக, ஞானிகளும் பக்தர்களும்—வெவ்வேறு உருவங்களிலும் வழிகளிலும் வளர்த்து விட்டிருக்கிறுர்கள். குணத்தைக் கொடுப்பது மதம்தான்; புத்தகம் அல்ல.

முக்கியமாக, ஹிந்துக்களை, நம்முடைய மத சம்பந்தமான புராணங்களைப் படித்தோ, அல்லது கேட்டோ தெரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ராமாயணத்தையும், மகா பாரதத்தையும் திரும்பத் திரும்பப் படியுங்கள், அல்லது யாரையேனும் படிக்கச் சொல்லிக் கேளுங்கள். நம் நடத்தையிலும், குணத்திலும் இருக்கும் கெடுதலான அம்சத்திற்கு இதுதான் தலை சிறந்த மருந்து. அதன் மூலமாக நாம் நம்மை நல்ல மனிதர்களாக ஆக்கிக்கொள்வோம். நம்முடைய நாட்டில் மகிழ்ச்சியும், சுபிட்சமும் நிறையச் செய்ய இந்த ஒரு வழிதான் உண்டு.

* * *

ரிஷிகளை நம்முடன் வாழ அழையுங்கள்; பிறகு எல்லாம் சரியாக நடக்கும்.

# முன்னேற்றத்திற்கு வழி

சிறப்புக்குரிய நம் நாடு சீக்கிரமாக முன்னேற்றம் அடையவேண்டும் என்பது எல்லாருடைய ஆசை. முக்கியமாக இது சுதந்திரச் செய்தியைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அனுபவிக்கும் நம் குழந்தைகளின் ஆசை. இந்த ஆசை பூர்த்தியாவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி என் நிச்சயமான முடிவை இந்தக் கட்டுரையில் சொல்லுகிறேன்.

முன்னேற்றத்தின் ரகசியம் நல்வாழ்க்கை. நல்வாழ்க்கையின்றி மற்ற முயற்சிகளும், சாதனங்களும் பயனற்றுப் போகும். அதைப் பற்றிச் சந்தேகமே வேண்டாம். தவிர, வேறு எந்த முறை இருந்த போதிலும் நாட்டு மக்களின் பூரண நல்வாழ்க்கை ஒன்றே போதும்; மிகப் பெரிய சிறப்பைத் தரும்.

நல்வாழ்க்கை தனி மக்களின் கையிலிருக்கிறது. அரசாங்கத்தின் கையிலில்லை. அரசாங்கம் தனி மக்களின் முயற்சிக்கு உதவிசெய்ய முடியுமேயொழிய சட்டங்களையும் அதிகாரத்தையும் கொண்டு மக்களை நல்வாழ்க்கையில் பலாத்காரமாகப் புகுத்த முடியாது.

பயன்படும் வாழ்க்கைக்கு வேண்டிய ஊக்கம் கற்பனை, அறிவு, அன்பு இந்த நான்கு குணங்களும்

மக்கள் உள்ளத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தால் மக்களின் தனி வாழ்க்கையும், சமூக வாழ்க்கையும், உன்னத நிலை அடையும்.

ஒவ்வொருவனும் தான் செய்யும் தொழிலில் ஊக்கம் கொண்டு உழைக்க வேண்டும். கற்பனு சக்தியை உபயோகித்து வேலை செய்யவேண்டும். மனிதனுக்கும் யந்திரத்திற்கும் முக்கியமான வித்தியாசம் மனிதனுடைய கற்பனு சக்தியே. சாமர்த்தியசாலிக்கும், மற்றவர்களுக்கும்—கற்பனு சக்தி படைத்திருப்பதும் இல்லாததுமே வித்தியாசம். கற்பனு சக்தியை ஆங்கிலத்தில் 'இமாஜினேஷன்' என்பார்கள். இந்த 'இமாஜினேஷ'னே ஆக்கவினைகட்கு மூலம். கற்பனைச் சக்தியை அப்பியாசத்தின் வழி வளர்க்க முடியும். பயிற்சியில்லாமற் போனுல் எதுவும் செத்துப்போகும்.

கற்பனை வேகம், பயன் தரக்கூடிய முறையில் சென்றுல் மனிதனுக்கு ஊக்கம் தரும். பயனற்ற வழிகளில் சென்றுல் கற்பனையானது வீண் மனோராஜ்யமாகும். கற்பனு சக்தியையும் சிந்தனையையும் பயனற்ற விஷயங்களிலும், முறைகளிலும் செலுத்தினுல் சோம்பலும், தூக்கமும் வளரும்.

நமக்குள்ள மனோசக்தியைப் பயனற்ற துறைகளில் செலுத்தாமல் தடுத்துக்கொள்ள வேண்டும். சித்தத்தைப் பயன் தரும் வேறு துறைகளில் செலுத்துவதே இதற்கு வழி. ஏதேனும் நல்ல காரியங்களில் மனத்தைச் செலுத்தினுல் பயனற்ற சிந்தனைக்கு இடமிராது. அவ்வாறன்றி 'வீட்டைக்

காலியாக' வைத்துக்கொள்ளப் பார்ப்பது வீணாகும். சுத்த சமாதி நிலை சாதாரண ஜனங்களுக்கு எட்டாது. எந்த நிலையிலுள்ளவர்களுக்கும் உள்ளத்தைச் செலுத்த வேண்டிய நல்ல விஷயங்கள் ஏராளமா யிருக்கின்றன. பயனற்ற மனோ வேகங்களை நீக்கி வேறு விஷயங்களில் மனத்தைச் செலுத்துவது அரிதல்ல, எளிதாகும். குறளாசிரியர் பயனில்லாத பேச்சைக் கண்டித்துத் தம்முடைய நூலில் ஒரு தனி அதிகாரம் அமைத்தார். பேச்சேயன்றி பயனற்ற கற்பனைக்கும், பயனற்ற சிந்தனைக்கும் அற நூல் களில் அதிகாரங்கள் தந்து கண்டித்தல் தகும். மனம் என்பது கெட்ட குரங்கு. அது சும்மா இருக்காது. தூங்கும் போதுங்கூட அது சேஷ்டையாகத் தூக் கத்தில் அமர்வதில்லை. குறைவுபட்ட தூக்கத்தில் ஏற்படும் குரங்குச் சிந்தனைகளும், கற்பனைகளுமே கனவுகளாகின்றன. அவற்றைக் கொண்டு வருங் கால சுக துக்கங்களையாவது வேறு எந்த உண்மை களையாவது காணப் பார்ப்பது சுத்த அறியாமை.

பயனற்ற சிந்தனைகளை விலக்குவதற்கு உபாயம் மேலே சொன்ன வழி ஒன்றே. மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டே யிருக்கவேண்டும். அதைச் சும்மா விடக்கூடாது. சுத்த வாழ்க்கையின் ரகசியம் இதுவே.

மனோராஜ்யமாகாத கற்பனையானது பொன் போன்ற செல்வம். குழந்தை நடக்கக் கற்பதைக் கவனித்தால் நடப்பதின் மூலப் பாகுபாட்டைக் காணலாம். முன் கால் எடுத்து வைத்ததும் உடல் முன்னால் சாய்கிறது. உடனே பின் அடி எடுத்து

வைத்து விழாமல் தடுத்துக்கொள்வதே நிமிர்ந்து நின்று நடப்பதின் ரகசியம். மானிட முன்னேற்றமும் இவ்வாறே நடைபெறுகிறது. முன் சென்று விழப் போவதும், அதைப் பகுத்தறிவு கொண்டு தடுத்துக் கொள்வதுமே முன்னேற்றத்தின் ரகசியம். முன் னெடுத்து வைக்கும் காலைப் போன்றது கற்பனை. எந்த ஆக்க வினையிலும் முதலில் கற்பனை வேகம் வேலை செய்யவேண்டும். பிறகு பின் காலாகிய பகுத் தறிவு உதவிக்கு வந்து நிற்கவேண்டும். கற்பனையும், பகுத்தறிவும் இரு கால்களைப்போல் தொடர்ந்து சென்றால் முன்னேற்றம் உண்டாகும். கற்பனையின்றி வெறும் பகுத்தறிவு மட்டும் இருந்தால் போதாது. நின்ற இடத்தில் நிற்போம். முன்னேற்றம் வேண்டு மானல் பிழை செய்யும் துணிவு வேண்டும். பிழை யைக் கண்டுகொண்டு அதை அகற்றும் வழி தேடு வதற்காகப் பகுத்தறிவும் கூடவே இருக்கவேண்டும். இல்லாவிடில் கற்பனையானது நம்மைப் பள்ளத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடும்.

* * *

தான் கண்ட கற்பனையிலும், தான் செய்த சிந்தனையிலும் ஒவ்வொருவனுக்கும் ஒரு இயற்கைப் பற்று ஏற்படுகிறது. உண்மைக்கும் தன்மைக்கும் மாறுபட்டிருந்தாலும் 'எனது' என்கிற அந்தப் பற்று அவனைப் பிடித்துக்கொண்டு பகுத்தறிவை மயக்கு கிறது. இதுவே அறிந்தோரை ஏமாற்றும் பெரிய பகை. தான் பெற்ற குழந்தைகளிடம் தாய்க்குள்ள அன்பைப்போல் தாம் பெற்ற கற்பனை, தாம் செய்து தீர்த்த சோதனை இவற்றில் அறிவு படைத்தவர்களுக்

கூட ஒரு இயற்கைப் பசை ஏற்பட்டு வரம்பு மீறவும் பார்க்கிறது.

பற்று அல்லது அபிமானம் இருப்பதாலேதான் குழந்தைகளுக்காகப் பெற்ஞேர்கள் பாடுபடுவதும் தியாகம் செய்வதும். அதைப்போலவே ஒவ்வொரு வனுக்கும் தான் கண்ட உண்மையில் பற்று ஏற்படு வதால் விடாமுயற்சியுடன், எதிர்ப்புகளினுலும் தடைகளினுலும் தளர்ச்சி உண்டாகாமல், மக்களின் முன்னேற்றத்திற்கு வேண்டிய இன்றியமையாத வினைகளில் மனிதன் ஈடுபடுகிருன். ஆனல் இந்த அபிமானம் பகுத்தறிவுக்கு அடங்கி நிற்கவேண்டும். "என் மகன் என் மகனே; அவன் திருடனுனுலும் மோசக்காரனுனுலும் அவனை விடமாட்டேன், நானும் அவனுடன் செல்வேன்" என்பது குற்றமாகும். அவ் வாறே கற்பனையிலும் சிந்தனையிலும் 'எனது' என்கிற பற்றைப் பிடித்துக்கொண்டு அர்த்தமற்ற மூர்க்கம் செய்தலும் குற்றமாகும். தான் வாதித்த அரசியல் கொள்கை, தான் போதித்த தருமம் அல்லது சம்பிரதாயம், தான் ஏற்படுத்திய பள்ளிக் கூடம் அல்லது போதனு முறை, தான் ஆரம்பித்த ஒரு காரியம் இவ்விதமான அகங்காரங்கள் எல்லாமே பகுத்தறிவை மீறினுல் பெருங்குற்றமாகும்.

பற்றுக்கள் இல்லாமலிருக்க முடியாது. பற்றுக் கள் இல்லாவிடில் குடும்பமில்லை, குழந்தையில்லை, அன்பு இல்லை, முயற்சி இல்லை. ஆனுல் வரம்பு மீறக்கூடாது. அந்த வரம்பே பகுத்தறிவு. பகுத் தறிவு இருந்தால் அடக்கமும் நிதானமும் அவற்றின் பயனுக வெற்றியும் பெறுவோம்.

பூதப் பிரபஞ்சம் ஒரு பேரற்புத நியதிக்குட்பட்டு நிற்கிறது. கடவுளுக்கு மக்கள் பல பாஷைகளில் பல பெயரிட்டிருக்கிறார்கள். அனைத்தையும் கடந்து நிற்கும் பொருளுக்கு, அதாவது அறிவுக்கு அப்பால் நிற்கும் தத்துவத்துக்கு, தமிழ்ப் பெரியோர் 'கடவுள்' என்று பெயர் வைத்தார்கள். ஆண்பாலும் பெண்பாலும் அல்லாத இந்த ளகர ஈற்று மொழியே அறிவைக் கடந்த பரம்பொருளைக் குறிக்கும் பல சொற்களுள் பொருட் செறிவும், வடிவழகும், தெளிவும், சுருங்கிய உருவமும் கொண்ட சிறந்த மொழி. எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நின்று வேலை செய்து உலகத்தைத் தாங்கிவரும் நியதித் தொகுதியில் ஒரு பகுதியைப் பௌதிக விஞ்ஞானப் புலவர்கள் சோதித்து விளக்கி வந்திருக்கிறார்கள். ஒரு நீர்த் துளி முதல் பூமண்டலத்தைப் போன்ற பெரும் கட்டிப்பொருள் வரையிலும், அதற்கு அப்பாலுமுள்ள எல்லாக் கோளங்களும் அதனதன் உருவத்தோடு நின்று நிலைத்திருப்பதற்குக் காரணம் அணுக்கள் ஒன்றோடொன்று ஒட்டி நிற்கும் இயல்பு. ஆங்கிலத்தில் இந்த சர்வ வியாபகமான பிண்ட சக்திக்குக் 'கொஹீஷன்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். பிண்ட சக்தி ஒழிந்து போனால் கல்லும் பொடியாய்ப் போகும்; நாம் வசிக்கும் வீடுகள் தரையோடு தரையாகப் போகும்; தனி உருவம் என்பதே இல்லாமல் சமஸ்த பொருளும் மலை, காடு எல்லாமே பொடியாகி ஒரு பெருந்தூசிக் கடலாக வடிந்து போகும்.

பொருள்களின் வடிவ நிலைக்குக் காரணமான பிண்ட சக்தியைப் போலவே சிதறிக் கிடக்கும்

கோளங்கள் அனைத்தையும் தம்தம் மண்டலஸ்தா னங்களில் நிறுத்தி வரும் சர்வ வியாபகமான சக்தி ஒன்று உண்டு. இடைவெளி விட்டுப் பிரிந்து நிற்கும் பொருள்கள் எல்லாம் ஒன்றை ஒன்று இழுத்துப் பிடித்து நிற்கின்றன. ஒரு புற்சுமையைக் கயிற்று வலையில் போட்டு இறுகக் கட்டினாற்போல் உலகம் முழுதும் சிதறிப் போகாமல் ஒரு பெருஞ் சக்தியினால் பிணைக்கப்பட்டு நிற்கின்றது. சர்வசதா சுழன்று சுழன்று அலைந்து கொண்டிருக்கும் எண்ணற்ற மண்டலங்கள் அனைத்தும், தம்தம் வட்டத்துக்குள் வட்டமிட்டுக்கொண்டு—ஆனால் வரம்பு மீறாமல் ஒன்றையொன்று இழுத்துப் பிடித்துக்கொண்டு நிலைத்து நிற்கின்றன. உலகம் யாவற்றிலும் வேலை செய்யும் இந்தப் பரஸ்பரக் கவர்ச்சி வேகத்துக்கு ஆங்கிலத்தில் 'க்ராவிடேஷன்' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

நாம் கையாளும் பொருள்களுக்கும் பூமிக்கும் உள்ள கவர்ச்சியே பொருள்களின் கனமாக நாம் உணர்கிறோம். எல்லாப் பொருள்களும் தரையை நோக்கி விழப் பார்க்கின்றனவல்லவா? இந்தியாவில் பொருள்கள் தரையை நோக்கி வீழ்வதைப் போலவே, அமெரிக்காவிலும் அதே சமயத்தில் பொருள்கள் அமெரிக்கத் தரையை நோக்கி, இந்தியாவில் விழும் திசைக்கு நேர் எதிரிடைத் திசையில் பாய்கின்றன. இந்தக் கண்டத்தில் பொருள்கள் விழுவதும், அமெரிக்காவில் விழுவதும் நேர் எதிரிடை கதி. காந்தத்தை நோக்கி இரும்புப் பொடி எல்லாத் திசையிலிருந்தும் செல்கின்ற விதமே

பொருள்கள் உருண்டை வடிவமான பூமியை நோக்கிச் செல்கின்றன. இந்தக் கவர்ச்சிச் சக்தியைத் தடுப்பதால் உண்டாகும் உணர்ச்சியே பொருள்களின் 'பாரம்'.

ஆகவே, எல்லாப் பொருள்களுக்குள்ளும் பரஸ்பர கவர்ச்சிச் சக்தி மறைந்து நிற்கிறது. இது பல தோற்றத்துடன் தன்னைக் காட்டிக் கொள்கிறது. பூதப் பொருள்களின் பரஸ்பர கவர்ச்சியைப் பராசக்தியின் ஓர் உருவமாகவே ஆராதிக்கலாம். எங்கும் பரவி நிற்கும் பௌதிக ஆகர்ஷணம் கடவுளின் ஒரு அர்ச்சாவதாரம் என்று வைதிக முறையில் சொல்லத் தகும்.

*　　　*　　　*

பௌதிகப் பொருள்களில் பரந்து வேலை செய்யும் இணைப்பைப் போலவே ஆன்மாக்கள் அனைத்துள்ளும் ஒரு பரஸ்பர கவர்ச்சிச் சக்தி நின்று வேலை செய்கிறது. ஒவ்வொரு பூத அணுவும் மற்ற அணுக்களை இழுத்துக் கொண்டிருப்பதைப் போல், ஒவ்வொரு ஆன்மாவும் மற்ற ஆன்மாக்களோடு பிணைக்கப் பட்டிருக்கிறது. உயிருள்ள உலகம் சிதறிப் போகாமலிருப்பதற்கு இதுவே காரணம். அகில ஆன்மக் கவர்ச்சியும் 'க்ராவிடேஷன்' என்கிற பூதக் கவர்ச்சியைப் போலவே ஒரு பேருண்மை. அது நிலைக்குத் தகுந்தவாறு தோற்றம் காட்டுகிறது. இந்தக் கவர்ச்சியே அன்பு.

குழந்தைக்கும் பெற்றோருக்குமுள்ள பற்றின் ரகசியத்தை நாம் முழுதும் கண்டோமா? இல்லை. மக்களிடை தோன்றும் நட்பின் ரகசியத்தைக் கண்

டோமா? இல்லை. அகில ஆன்மக் கவர்ச்சியும் பராசக்தியின் ஒரு அர்ச்சாதவதாரமாகும். உயிர்களில் காணும் கூட்டுறவும் ஸ்திரீ புருஷத் தொடர்பும், சமூகப் பற்றும், தேச பக்தியும் இன்னோரன்ன பல கவர்ச்சிகளும் இந்த அன்பு என்கிற வேகத்தில் அடங்கும். க்ராவிடேஷனைப் போலவே அன்பு நியதியும் விசுவப் பரப்புக் கொண்டது. உலகம் முழுதும் அன்பு என்கிற சக்தியால் கட்டுண்டு நிற்கிறது. ஒன்றிலிருந்து உண்டான பலவும் மறுபடி ஒன்ருகச் சேர இடைவிடாமல் விரும்புகின்றன! அதுவே பலவித 'பற்று'க்களாகவும் கவர்ச்சிகளாகவும் தோற்றம் காட்டுகிறது. பௌதிகப் பொருள்களின் கனத்தைப் போலவே தடுக்கப்பட்ட அன்பு சக்தியானது சுகம், துக்கம், துவேஷம் இவை போன்ற பல மனோ நிலைகளாகத் தோற்றம் கொள்கிறது.

* * *

அன்பின் பெருமையையும், அதன் கடவுள் தன்மையையும் உணர்ந்து அதையும் அதன் வடிவில் ஈசனையும் ஆராதித்து நடப்பது ஞானம். ஊக்கம், கற்பனைச் சக்தி, அறிவு, அன்பு இவற்றையெல்லாம் நாம் படைத்துப் பாடுபட்டாலும் ஆண்டவன் அருளும் வேண்டும். அதுவன்றி ஒரு பயனும் பெற மாட்டோம். நல்வழியில் நின்ருேமாஞல் ஈசனுடைய அருளும் பெருகும்; வானம் பொழியும் மாரிபோல் தாஞகப் பெய்யும்.

நல் வாழ்க்கைக்கு ஊக்கம், கற்பஞ சக்தி, அறிவு, அன்பு இவற்றை வளர்க்க வேண்டும்

என்று சொன்னேனே யொழிய பொய், மோசம், திருட்டு இவை கூடாது என்று சொல்லவில்லை. உலகத்தில் சிலர் இருந்து கொண்டே இருப்பார்கள்; பொய்யரும், மோசக்காரரும் திருடரும் இல்லாமல் சமூகத்தை முற்றிலும் சுத்தச் சத்துவச் சமூகமாகச் செய்ய ஒருநாளும் முடியாது. ஆனால், பெரும்பாலோர் அறிவும் அன்பும் படைத்து ஊக்கத்தோடும், நல்ல கற்பனைச் சக்தியைச் செலுத்தியும் பாடுபட்டு வந்தால் சமூகம் மிக உன்னதச் சிறப்பு எய்தும். பொய்யும் திருட்டும் தாமாகவே வெட்கப்பட்டு மறைந்து கொள்ளும்.

நம்புங்கள், நம்பி நிழலில் நில்லுங்கள். மனிதன் புத்தி எப்போதும் 'கடவுள் உண்டு, கடவுள் எங்கே?' என்று சந்தேகத்தில் ஊசலாடிக்கொண்டே இருக்கும். மரத்தடியில் நிழல், அப்பால் உயிரைக் காயும் வெயில். நிழலில் நில்லுங்கள்; வீணில் வெயிலில் அடிபட வேண்டாம். சின்ன விஷயங்களுக்கு அத்தாட்சி உண்டு; பிரமாணம் கிடைக்கும். பேருண்மைகளுக்குச் சாட்சியும் இல்லை; பிரமாணமும் கிடைக்காது. பொய்யென்று உறுதி கூறுவாரும் இல்லை. நம்புங்கள், நம்பி நிழலில் நில்லுங்கள். வீணாக வெயிலில் காய்ந்து சாக வேண்டாம்.

கடவுள் உண்டு; அன்பு உண்டு. உய்யும் வழி அவனை நோக்கிச் செல்லல். சுற்றுமுள்ளவர்கள் நலமே என் நலம்—என்று எப்போதும் அன்பு செய்து, அன்பு எண்ணி, அன்பு பேசி, வாழ்க்கையை நடத்துவதுதான் முன்னேற்றத்திற்கு வழி.

# பக்திப் பாடல்கள்

ஆயிரக்கணக்கான வருஷங்களாக மார்கழி மாதத்தில் நாமெல்லாம் சந்தோஷமாகக் காலத்தைக் கழித்து வந்ததாகத் தெரிகிறது. அந்த மாதத்தில் பாட்டுகள் பாடி, பேரானந்தம் பெறுவது வெகு நாட்களாக ஏற்பட்டிருக்கிறது.

பாட்டுக்காக நம் நாட்டில் இந்தப் பழக்கம் ஏற்படவில்லை. பெரிய மரத்தில் சிறு வெற்றிலைக்கொடி ஏறி, தனக்கு ஓர் ஆதரவைப் பெற்றுப் பிறருக்கும் சந்தோஷத்தை அளிக்கிறது. வெயிலை அடையக் கோல் தேடியோடும் கொடிபோல் பழைய வழக்கத்தின் பேரில் பாட்டு ஏறிச் சந்தோஷத்தையும் இன்பத்தையும் தருகிறது.

வாழ்க்கையை நடத்துகிறவர்களுக்குப் பக்தி இயற்கைச் சம்பத்து. மார்கழி மாதம் பக்திக்குச் சரியான மாதம். வெயிலும் குளிரும் பக்குவமாகச் சேர்ந்த மாதம். தேகத்தைச் சரியாக வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அதிகாலையில் எழுந்து

ஸ்நானம் செய்து, பக்தியுடன் ஞானப் பாட்டுக்களைப் பாடி ஞானத்தையும் உணர்ச்சியையும் புதுப்பித்துக் கொள்ளுகிறார்கள். பழைய நதிகள், பழைய குளங்களுடன், நம் ஆசாரியர்கள் லேசாக நம்மை ஆட்கொள்ள இந்தப் பக்திப் பாட்டுக்களைச் செய்தார்கள். குழந்தைகளுக்குப் பாட்டும், பெரியவர்களுக்கு ஞானமும், நிஷ்டையில் இருப்பவர்களுக்குப் பக்தியும் எல்லாம் ஒன்றுதான்.

பகலெல்லாம் வாழ்க்கை நடத்திவிட்டு, ராத்திரி நாம் தூங்குகிறோம். தூக்கம் தானாக வந்துவிடுகிறது. இந்த இயற்கையான ஆச்சரியத்தைப் பாருங்கள். இது டாக்டர்கள் செய்ததா? இப்பொழுதுதான் அதில் உள்ளதை அறிந்து டாக்டர்கள் பிறருக்கு, "ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும்" என்ற மருந்தைச் சொல்லுகின்றனர். ஓய்வெடுத்துக் கொள்வதென்பது தூக்கந்தான். தூக்கத்தில் எவ்வளவு ஆனந்தம் பாருங்கள்! கவலையே இல்லை. நான்கூடச் சிறையில் இருக்கும்போது பார்த்திருக்கிறேன். தூக்குத் தண்டனை அடைந்த ஒருவன், 'இன்னும் சில நாட்கள் முடிந்ததும் குழந்தைக்குத் தகப்பனும் மனைவிக்குக் கணவனும் தான் இருக்கப்போவதில்லை' என்று நினைத்துக் கவலை கொண்டாலும் இரவு வந்ததும் இயற்கையான தூக்கம் அவனை வந்து அடைகிறது. அந்தக் கவலைகளை மறந்து ஓய்வெடுத்துக் கொள்ளச் செய்கிறது. அதனால்தான் மனிதனுக்கு ஏற்பட்ட நூறு பிராயத்தில் பாதி தூக்கமாகவே இருக்கிறது. சிலர் வாழ்க்கையில் தமக்குள்ள பற்றுதல் காரணமாகத் தூக்கத்தைக் குறைத்துக்

கொள்ளுகிருர்கள். தூங்குவது க்ஷேமம். மனிதன் நீண்ட நாள் ஜீவித்திருப்பதற்கு அவசியமானது.

இந்தத் தூக்கத்தை விட்டுக் குளிர் காலத்தில் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து பக்திப் பாடல்களை அனுபவித்து ரசித்து இன்புறுவது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனல் இந்தத் தூக்கம் வேறு, அஞ்ஞானமாகிற தூக்கம் போகவேண்டும். இந்த இருள் நீங்கினல் அகம் பாவம் குறையும். இது முக்கியமான உட்கருத்து.

நாம் பிரதி தினமும் ஆகாரம் உட்கொள்ளு கிருேம். இந்த ஆகாரம் தேகத்தில் பயன்பட்ட பிறகு தேகத்தில் விஷம் உண்டாகிறது. இந்த விஷத்தைத் தேகம் அகற்றி உணவுச் சத்தை ஏற் கின்றது. மாறி மாறி இந்த வேலை நடக்கிறது. இப்படி மாறி மாறி வேலை நடப்பதே உயிர். இந்த உயிர்தான் ஆகாரத்தை உட்கொள்ளுகிறது. ஆகாரத்திலிருந்து உண்டாகும் விஷமே தூக்கத் தைக் கொடுக்கிறது.

சிலருக்குத் தூக்கம் வருவதில்லை என்ருல் தூக்கம் தரும் விஷத்தை மருந்தாகக் கொடுக்கின் றனர். அது தூக்கத்தை உண்டாக்குகிறது. சிறிது கொடுத்தால் போதையும் தூக்கமும் உண்டா கின்றன. அதிகமானல் உயிருக்கே ஆபத்து உண்டாகிறது.

பின் ஒரு காலத்தில் இந்தத் தூக்கமே வராமல் நாள் முழுவதும் இரவு பகலாக வாழ்க்கை நடத்த ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிப்பார்களோ என்னவோ தெரியாது. காலராவைத் தடுக்கக்

கிருமிகளைச் செலுத்துவதுபோல மாடுகளுக்கு மருந்து மூலம் கருத்தரிக்கச் செய்வதுபோல, மனிதன் எப்பொழுதும் தூங்காமல் இருக்க வழி கண்டு பிடிக்கலாம். ஏனெனில் அப்பொழுதுதானே எப்பொழுதும் இவனுக்குக் கவலை ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்! அணுவை ஆராய்ச்சி செய்து இறுதியில் மனுஷ்யனை நிர்மூலமாக்க உபயோகிக்கவில்லையா? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல் என்ன என்ன வருமோ, யார் கண்டது? தெய்வத்துக்குத் தான் தெரியும்!

ரோஜாச் செடியைப் பாருங்கள். முள்ளுடன் கூடிய அந்தச் செடியிலிருந்து அழகான, மணமான, இன்பமான புஷ்பம் வருமென்று யார் கண்டது? யார் உண்டாக்கியது? இந்த ரகசியத்தை அறிந்தால் உலகை அறியலாம். கடவுளை அறியலாம். ஜலத்தை ஆராய்ச்சி செய்து அதில் இரண்டு வாயுக்கள் இருப்பதாகக் கண்டு பிடித்தனர். ஆனல் அந்த இரண்டு வாயுவையும் சேர்த்து ஜலமாக்கி விடுவதென்பது சுலபமா? சாத்தியமா? வேண்டுமானல் ஜலத்தை இரண்டு வாயுக்களாகப் பிரிக்கலாம். மனுஷ்யனைக் கூட அங்கமாகப் பிரித்துக் காணலாம். டாக்டர்களைக் கேட்டால் விளக்கிச் சொல்லுவார்கள். அங்கங்களைக் கொண்டு மனுஷ்யனைச் செய்ய முடியுமா? அது ஆண்டவனுடைய வியாபாரம். அது அவன் சக்தி. இவ்விதம் ஒவ்வொரு பொருளையும் தெரிந்துகொண்டால் ஆஸ்திகம் தானுக வரும். ஆஸ்திகம் என்பது அடக்கம். ஆண்டவன் படைப்பில் வியப்பும் சந்தோஷமும் உண்டாகிக் கலந்ததே

ஆஸ்திகம். அறிவுக்கும் பக்திக்கும் விரோதம் இல்லை. ஆனால் அன்பும் அடக்கமும் சேரவேண்டும்.

ஒரு வேப்பங் கொட்டையை எடுத்துக்கொண்டு பாருங்கள். அதிலிருந்து எவ்வளவு பெரிய மரம் உண்டாகிறது! பூ, காய் எல்லாம் உண்டாகின்றன. அதிலும் எவ்வளவு வியப்பான கசப்பு ஏற்பட்டிருக்கிறது? அந்தச் சிறு வேப்பங்கொட்டையில் ஆண்டவன் இதை எல்லாம் வைத்திருக்கிறான்! இதுதான் இப்படி என்றால், ஒரு சிறிய ஆலம் பழத்தில் எவ்வளவு விதைகள்! ஆயிரக்கணக்கான விதைகளில் ஒவ்வொன்றும் தனக்குள் எவ்வளவு பெரிய மரத்தை அடக்கிக் கொண்டிருக்கிறது! இது ஒன்றிலேயே ஆண்டவன் பெருமையையும் படைப்பையும் அறியலாம்.

அடக்கமும் பக்தியும் வேண்டும். படிக்காதவர்கள் அடைவார்கள். படித்தவர் பாடுதான் கஷ்டம். படித்தவர்களைத்தான் ஆண்டவன் காப்பாற்ற வேண்டும்போலிருக்கிறது! அவர்களுக்குத்தான் அந்த பக்தியும் அடக்கமும் இலேசில் வருவதில்லை.

ஒரு மோட்டார் வண்டி மணிக்கு 25 மைல் வேகம் போனாலே உள்ளே உட்கார்ந்திருக்கும் போது பயம் உண்டாகிறது. இப்பொழுது நாமெல்லாம் உட்கார்ந்திருக்கிறோம் என்றல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறோம்? உண்மையில் அப்படி இல்லை. மணிக்கு 72,000 மைல் வேகத்தில் சூரிய மண்டலத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறோம். இதை நாஸ்திகர்கள் கூட ஒப்புக்கொள்வார்கள். இதற்குள் தான் ஒருவருக்கு ஒருவர் சண்டை பிடித்துக்கொள்

வது, திட்டுவது, கோபம், தாபம் எல்லாம். இவ்வளவு வேகமாகச் சுற்றும் வண்டிக்குள் ஏறிக் கொண்டிருக்கிறோமே என்று அறிந்தால் அடக்கம் ஏற்படும். பக்தியும், பிறகு அதிலிருந்து ஆஸ்திகமும் ஏற்படும்.

பக்திப் பாடல்களைப் படியுங்கள். தேவாரத்தையும் திவ்யப் பிரபந்தங்களையும் படியுங்கள். பாடத் தெரிந்தால் மிகவும் சிலாக்கியம். தானுகவே ஆஸ்திகம் வரும். இல்லாவிட்டால் ஸயன்ஸையாவது நன்ருகப் படியுங்கள். ஆண்டவனுடைய பிரபாவம் தெரியும்.

# புது வருஷத் திட்டம்

1. இதை மனதில் முதலில் திடப்படுத்திக் கொள்ளுங்கள்; நாம் அடிமை வாழ்வு வாழ்வது மிகவும் அவமானத்துக்குரியது. இதை உணர்ந்த ஒவ்வொருவரும் காங்கிரஸ் அங்கத்தினராகச் சேர வேண்டியது அவசியம். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட எவரும் அவரவர் வாசஸ்தலமோ அல்லது தொழில் செய்யும் ஸ்தலமோ அடங்கிய ஜில்லாவிலுள்ள காங்கிரஸ் சபையில் அங்கத்தினராகச் சேரலாம்.

2. கதரைத் தவிர வேறு துணியை விரலாலும் தொடுவதில்லை என்று விரதம் செய்து கொள்ளுங்கள். கதர் உடையினால் செலவு அதிகமாகிவிடும் என்று பயப்பட வேண்டாம். ஒரு ஜோடி வேஷ்டி. ஒரு ஜோடி சவுக்கம். ஒரு ஜோடி பனியன்— இவைதான் ஆறு மாதத்துக்கு வேண்டியவை. இவை அனைத்தும் என்ன விலையாகும் தெரியுமா? ஆறே ஆறு ரூபாய்தான்.

3. உங்கள் கிராமத்தைச் சுற்றிப் பார்த்து அங்கே உங்களுக்குத் தேவையான சாமான்களில் என்னென்ன கிடைக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஆலைச் சரக்குகளுக்கும் அன்னிய

நாட்டுச் சரக்குகளுக்கும் பதிலாகக் கிராமத்தில் உற்பத்தியாகும் சரக்குகளையே உபயோகியுங்கள். கொஞ்சம் யோசித்துப் பார்த்தீர்களானால், பல அன்னிய சாமான்களுக்குப் பதிலாகக் கிராமத்தில் உற்பத்தியாகும் சாமான்களையே உபயோகிக்கலாம் என்று அறியலாம். இதனால் உங்கள் ஊர்த் தொழிலாளிகளுக்கு உதவியளிப்பீர்கள்; அவர்கள் அடியோடு மடிந்து விடுவதினின்று தப்புவிப்பீர்கள்.

4. தேக ஆரோக்கியத்தை வளர்க்கக்கூடிய உணவுப் பொருள்களையே உட்கொள்ளுங்கள். கைக்குத்தரிசி, புதுக் காய்கறிகள், உள்ளூர் பழ வர்க்கங்கள், உள்ளூர் பால், தயிர், வெண்ணெய் முதலியவைகளையே உபயோகியுங்கள். விளம்பரங்களைக் கண்டு மயங்கி தகர டப்பிகளிலும், சீசாக்களிலும் அடைக்கப்பட்டிருக்கும் உணவுகளை ஒரு போதும் உட்கொள்ளாதீர்கள்.

5. கூடுமானவரையில் உங்கள் தினசரி வாழ்விற்கு அவசியமான வேலைகளைப் பிறர்மேல் போடாமல் நீங்களே செய்து முடித்துக் கொள்ளுங்கள். இது உங்கள் தேக ஆரோக்கியத்துக்கு அநுகூலம். இந்தப் பயிற்சி ஏற்பட்டுவிட்டால் உங்கள் வாழ்க்கை முழுவதும் பிறர் கையை எதிர் பார்க்காமலே சுதந்திரத்துடன் வாழலாம். இது மிக முக்கியமான விஷயம்.

6. உங்கள் சரீரத்தை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆடைகளையும் அவ்வாறே அழுக்கின்றி உடுத்துங்கள். உங்கள் வீடு வாசல்களைப் பரிசுத்தமாகக் குப்பை கூளமின்றி

வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஊரை—கிராமமானலும், நகரமானலும்—சுத்தமாக வைத்துக் கொள்ள எவ்வளவு உதவி செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்யுங்கள்.

சிறுவர் சிறுமிகள் துணி துவைப்பதற்கும், துடைப்பத்தை உபயோகிப்பதற்கும் நன்கு அறிந்திருக்க வேண்டும். இதை இன்றியமையாத ஒரு யோக்கியதையாகக் கருதவேண்டும்.

7. நம்மைப் போலத்தான் பிறரும் என்று கருத முயற்சி செய்யுங்கள். பாலர்களிடத்தில் அன்பு காட்டுங்கள் ; பெரியோரிடத்தில் மரியாதை வையுங்கள் ; ஜாதி மத பேதமின்றி எல்லாருக்கும் சகாயம் புரியச் சித்தமாக இருங்கள்.

8. அசட்டுப் பிசுட்டுக் காரியம் எதிலும் தலையிடாதீர்கள். உங்கள் நண்பர்களும் உங்களிடம் அபிமானம் உள்ளவர்களும் உங்கள் காரியங்களைக் கவனிக்கிருர்களென்று தெரிந்தால் எவ்வாறு நடந்து கொள்வீர்களோ அவ்வாறே எப்பொழுதும் நடந்து கொள்ளுங்கள்.

9. மனதிலும், வாக்கிலும், காரியத்திலும், தெய்வபக்தி கொண்டவர்களாக இருங்கள். மகா ஞானிகளால்கூட இப் பிரபஞ்ச சிருஷ்டியின் தத்துவத்தைப் பூரணமாய் அறிய முடியவில்லை. எனவே, அறிவுக்கு அதீதமாய் உள்ள பராசக்தியிடம், பரம் பொருளிடம் பக்தி கொள்ளுங்கள். சர்வ மதங்களும் இந்த உள்ளுணர்ச்சியின் வெளிப்படையான தோற்றங்களே யாகும்.

# தமிழ் வியாஸர்

முற்காலத்தில் ஸம்ஸ்கிருத வேதங்களையும், இதிஹாச புராணங்களையும் வியாஸர் எப்படித் தேடித் திரட்டி உருவாக்கித் தந்தாரோ அப்படியே தமிழ் இலக்கிய ரத்தினங்களை ஸ்ரீமான் உ. வே. சாமி நாதய்யர் இக் காலத்தில் தேடித் திரட்டித் தந்தவர். ஆகையால் ஸ்ரீ சாமிநாதய்யருக்குத் "தமிழ் வியாஸர்" என்றே நாம் புதுப் பட்டம் இடலாம்.

பாரதநாட்டில் ஆங்கிலம் பரவியதும் தமிழ்மொழி தன்மீது தானே குறைகூறிக்கொண்டு வெட்கி மறைந்து கொண்டது. ஸ்ரீ சாமிநாதய்யர் பழைய நூல்களையும் அவைகளின் அரிய உண்மைகளையும் கடலில் முத்தெடுப்பது போல் முழுகித் தேடி யெடுத்துத் துளைத்துக் கோத்துக் கொடுத்த பிறகுதான் தமிழின் பெருமையை மறுபடி அறியலானோம். "இவ்வளவு அழகும் நாகரிகமும் பொருந்தியதா நம் பாஷை?" என்று ஆங்கிலமும் வடமொழியும் கற்ற தமிழர்கள் வியந்தார்கள்.

ஸ்ரீ சாமிநாதய்யர் தமிழுக்குப் புதிய கௌரவத்தை உண்டாக்கி அது ஸமஸ்கிருதத்திற்குச் சமானமான ஆஸனத்தில் அமர்ந்து விளங்குமாறு செய்தார் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீ சாமிநாதய்யர் சோதித்து வெளியிட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை

முதலிய நூல்களைத் திறந்து படித்தபின் தான், தமிழ் மொழியின் லாகவமும், நயமும், எளிய நடையில் ஆழ்ந்த பொருள்களை யடக்கும் அதன் அழகும், தமிழரின் பழைய வாழ்க்கை மேன்மைகளும், தாய் மொழியை இளவயதில் மதியாமற்போன என்னைப் போன்ற துர்ப்பாக்கியர்களுக்குத் தெரியவந்தன.

தாய்மொழிக்கு இவ்வளவு தொண்டு செய்து பெரும் புகழும் பெற்றிருந்த போதிலும் ஸ்ரீ சாமிநாதய்யரவர்களுடைய அடக்கமானது ஒப்பில்லாத அரிய ஒரு குணம். இதுவும் குலத்தில் உயர்வு–தாழ்வு, ஆரியர்–திராவிடர், வடமொழி–தென்மொழி என்னும் பேத உணர்ச்சிகள் எள்ளளவும் காணுமலிருப்பதும், இப் பெரியாருடைய தனிச் சிறப்பு. அய்யரவர்களின் முன்னுரைகளைப் படிக்குங் காலத்தில் இந்தக் குணங்கள்தான் என் மனதைக் கொள்ளை கொள்கின்றன.

ஸ்ரீ சாமிநாதய்யரின் கல்வி கடலைப் போன்றது. மெய்வருத்தம் பாராத அவருடைய முயற்சியுடன் எறும்பும் தேனீயுமே போட்டி போடலாம். தாய் மொழியின் தொண்டிலும், கல்வி முயற்சியிலும் அவருடன் நாம் போட்டிபோட முடியாதாயினும் அவருடைய அடக்க குணத்தையாவது நாம் அனைவரும் கற்றுக் கொள்ளவேண்டும்.

# எப்போதும் சிரிக்க வேண்டும்

செடிகள் வளர வெய்யில் வேண்டும். சமூகம் வளரச் சமுதாய விழாக்கள் வேண்டும். கொம்பு, கூத்து, கூட்டம் எல்லாம் வேண்டும். "இது என்ன? மத்தளமும் மேளமும் எல்லாம் மூட நம்பிக்கை; வீண் செலவு. கடவுளைத் தியானிக்க இவையெல்லாம் என்னத்துக்கு?" என்று விழாக்களையும் உற்சவங்களையும் நோன்புகளையும் தள்ளிவிட்டோமானல் சமுதாயச் செடி வாடிப்போகும். வெய்யில் இல்லாமற் போனல், எவ்வளவு தண்ணீர் ஊற்றினுலும் செடி பிழைக்காது. அன்பும் மகிழ்ச்சியும் சிரிப்பும் விளையாட்டும் இல்லாமற் போனல், குழந்தைக்கு எவ்வளவு உணவு ஊட்டினுலும் சரியாக வளராது. சமூக வளர்ச்சிக்கு உணவும் வீடும் படிப்பும் மட்டும் இருந்தால் போதாது. பொது விழாக்களும் விளையாட்டுகளும் அவசியம்.

கிறிஸ்துவப் பண்டிகைகள், முஸ்லீம் பண்டிகைகள், ஹிந்துப் பண்டிகைகள் எல்லாமே எல்லாருக்கும் மகிழ்ச்சி தரும் சந்தர்ப்பங்கள். அது அவர்கள் பண்டிகை. இது இவர்கள் பண்டிகை என்கிற வித்தி

யாசம் இல்லாமல் எல்லாவற்றிலும் எல்லாரும் கூடியமட்டில் கலந்துகொண்டு நம் நாட்டில் மகிழ்ச்சி அடைந்து வருகிறோம். இதுவே நல்ல முறை.

ஊர் முழுதும் கூட்டம் கூடுவதற்குச் சௌகரிய மான பெரிய கோயில்கள் தமிழ்நாட்டில் இருக்கின் றன. கஷ்டமின்றிக் கூடிச் சந்தோஷமாகத் திரு விழாக்கள் நடத்தச் சரியான நாட்களை நம்முடைய முன்னோர்கள் பார்த்து நிச்சயித்து வைத்திருக்கிறார் கள். அந்தத் தினங்களில் அநேகமாக வானம் கொஞ்சம் மப்பு மூடி இலேசாகத் தூற்றலும் போடும். திதி, நட்சத்திரம் இவற்றுக்கும் மழைக்கும் கொஞ் சம் சம்பந்தம் உண்டு.

பொங்கல் தினத்தன்று எல்லாரும் மகிழ்ச்சி யுடன் ஆண்டவனைத் துதியுங்கள்; அம்மனைத் துதி யுங்கள். செந்தமிழ் நாட்டில் யாதொரு சண்டையும் கலகமும் இன்றிப் பொங்கல் நோன்பு நடைபெறு வது நம்முடைய குழந்தைகள் செய்த பாக்கியம். வாழ்க நம் நாடு!

குழந்தைகளே! சந்தோஷமாக விளையாடுங் கள். அம்மா சொல்லுகிறபடி கேளுங்கள். அப்பா சொல்லுகிறபடி கேளுங்கள். வெகு தூரத்தில் உள்ள நான் சொல்லுவதையும் கேளுங்கள். அனுமாரைப் போல் தைரியமாக இருங்கள். சோம்பல் வேண் டாம். அழுக்கு உதவாது. சுத்தமாகவும் ஒழுங்காக வும் இருக்கவேண்டும். எந்த இடத்தில் எது இருக்க வேண்டுமோ அங்கே அதை வைத்து, ஒழுங்கு கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நல்ல குழந்தை

களாக இருங்கள். எல்லாம் தெரிந்து கொள்ளுங்கள். பாட்டுப் பாடுங்கள். ஆட்டம் ஆடுங்கள். யாரிடமும் கோபம் கூடாது. எப்போதும் சிரித்துக் கொண் டிருக்க வேண்டும்.

*  *  *

காயும், கனியும், கிழங்கும், கரும்பும், மாடும். நிலந்தரும் செல்வம் அனைத்தும் வளர்வதற்குப் பொங்கல் நோன்பு மிக முக்கியமானதாகும். மகிழ்ச்சி யோடு கலந்த உறுதியான மன முடிவே நோன்பு. 'நாட்டின் விளைவைப் பெருக்குவோம்' என்று பொங் கல் தினத்தன்று தென்னாட்டு மக்கள் உறுதி செய்து முடித்துக் கொள்ள வேண்டும். பயிர்ப் பண்டம், தொழிற் பண்டம் எல்லாவற்றையும் போதியதற்கு மேல் உண்டாக்கி நாட்டின் செல்வத்தையும் வியா பாரத்தையும் வளர்ப்போமாக. இதற்கு வேண்டிய ஆற்றலை நமக்குத் தந்து அருளும்படி தெய்வத்தை வேண்டிக் கொள்வோமாக. தாய்மார்கள் வேண்டிக் கொண்டால் தெய்வம் உவந்து கொடுக்கும்.

இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.

இது தமிழ் முனிவரின் வாக்கு. "என்னிடம் ஒரு பொருளுமில்லையே!" என்று ஏங்கிச் சும்மா இருப்ப வனைப் பார்த்துப் பூமித் தாய் சிரிப்பதாகத் திருவள் ளுவர் சொல்கிறார். பாடுபட்டால் பயன் உண்டு என்பது இதன் கருத்து.

பெருந்தவத்தின் பயனாகச் சுதந்திரம் பெற்றோம். பாடுபட்டுப் பொருள் உற்பத்தி செய்தோமானால்,

கிடைத்த சுதந்திரம் ஒளி பெற்றுப் பிரகாசிக்கும். ஒருவர் பேரில் ஒருவர் பழி சொல்லிக்கொண்டு சோம்பிக் கிடந்தோமானல் தவம் செய்து பெற்ற மாமணியைத் தோற்போம்.

மடிமை குடிமைக்கண் தங்கின் தன்ஒன்னர்க்கு
அடிமை புகுத்தி விடும்.

இதுவும் தமிழ் முனிவரின் மொழி. இப்போதும் எப் போதும் உண்மை. சோம்பலினல் வறுமைக்கு இடங் கொடுத்தோமானல் சுதந்திரம் இழந்து அடிமை களாகி விடுவோம்.

இனி நமது அருமைத் தாய் நாட்டில் அடிமை யும் இல்லை. மடிமையும் இல்லை என்று எல்லாரும் நிச்சயம் செய்து கொண்டு தமிழ்த் தனி நோன்பை நன்ருகக் கொண்டாடுவோமாக!

# தீபாவளிப் பட்டாசு

"ஸ்தித பிரக்ஞை, அதாவது, உள்ள அமைதியை அறிந்த ஒருவன், எப்படிப் பேசுவான்? அவன் எவ்வாறு இருப்பான்? எப்படி நடந்து கொள்ளுவான்?" என்று அருச்சுனன் கேட்க, பகவத் கீதை இரண்டாவது அத்தியாயத்தில் பகவான் விளக்கிச் சொல்லுகிறார்.

சென்னை அரசாங்கத்திலிருந்து நான் விலகிக் கொண்ட செய்தி கிட்டினவுடன் வாலிபப் பருவத்தி லிருந்து என்னுடன் நெருங்கிப் பழகிய ஒரு நண்பர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் பெயர் பெற்ற ஆங்கிலக் கவி உவர்த்ஸ்வுவர்த்து என்பவர் எழுதிய சில மொழிகளை எடுத்துக் காட்டி, "இது உங்கள் மந்திரி சபையின் செயலை விளக்குகிறது" என்று எழுதி யிருக்கிறார். என் மேல் அவருக்குள்ள நட்பின் மோகத்தினால்தான் அம்மொழிகளில் எங்கள் செயலுக்குப் பொருத்தம் கண்டார். ஆன போதிலும், அந்த ஆங்கிலக் கவியின் மொழிகள்

கண்ணன் மொழிக்கு எவ்வளவு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவை என்பதை பகவத்கீதை படித்த தமிழர் காணலாம். தீபாவளியன்று படிக்கத் தகுந்த மொழிகள் :—

" ஆனந்த நிலையடைந்த வீரன் யார், சொல்லுவாய் ?"

" சொல்கிறேன், கேள் !

" அரசு புரியும் பதவி யடைவதாயிருந்தால், சூழ்ச்சி யின்றி நேர் வழியில் அடைவான். அடைந்த பின் கண்ணியத்துடன் பதவியை வகிப்பான். வகிக்கும்போது, எப்பொழுதாவது மானத்திற்குப் பழுது வருவதாயின் உடனே விலகிக் கொள்ளுவான்.

" உள்ளத்தில் பொங்கும் ஆசைகளை அடக்கி ஆள்வான்.

" தன்னிடம் ஒப்படைத்த கடமையை அறிந்து கோணாமல் பாலிப்பான்.

" கௌரவக் குறைவான காரியம் ஒரு நாளும் செய்ய மாட்டான். பொருளோ, பதவியோ, செல்வாக்கோ அடையும் பொருட்டு, செய்ய வேண்டியன செய்யாமலிருக்க மாட்டான்.

" தடையும் எதிர்ப்பும் நேரிட்டு, சினம் ஓங்கிப் பொங்கும் காலத்திலும், சாந்த நிலையில் தான் கண்ட அற வழியிலேயே நிற்பான். அதிலிருந்து பிறழமாட்டான்.

" நேரிடும் கஷ்டங்களை முன்பே கண்டவை என்று எதிர்கொண்டு கலங்காமல் நிற்பான். எதிர்பாராத நிலைமை

நேரிடின், தைரியத்துடன் அதற்குப் பொருந்திய அறத்தை நடத்துவான்.

**தீபாவளிப் பட்டாசுக் கட்டு மாதிரி எட்டுக் காங்கிரஸ் மாகாணங்களும் வெடித்தன! பட்டாசு சுடுவது அல்ல பெரிது. நரகாசுரன் வதமானன் என்று அறிந்து மங்கள ஸ்நானம் செய்து புதுக் கதர் உடுத்திப் பட்டாசும் சுடவேண்டும்.**

# திருக்குறளைப் படி!

புவனேசுவரி என்ற ஊரில் ஒரு வாலிபன் இருந்தான். அவனுக்கு நினைவு தோன்றுவதற்கு முன் அவன் தகப்பனும் தாயும் இறந்துபோய்விட்டார்கள். ஆயினும் தகப்பனார் வைத்திருந்த வீடு, பசு மாடுகள், கொஞ்சம் பணம் இவற்றை வைத்துக் கொண்டு எப்படியோ வளர்ந்து, சரியாக ஜீவனம் நடத்தி வந்தான். ஊரார் சொன்னதைக் கேட்டுத் தன் தகப்பனார் இப்படித் தனக்கு வேண்டியதெல்லாம் வைத்துவிட்டு மேலுலகம் சென்றாரே என்று தவறாமல் தகப்பனாருக்கு ஆண்டுதோறும் திதி செய்து வந்தான். மிக்க நன்றியுள்ளவனாக இருந்தான்.

இவ்வாறெல்லாம் நன்றாக இருந்தபோது இடையில் ஒருவர், அவன் வீட்டுக்கு விருந்தினராக வந்தார். அவர் வாலிபனுடன் பேச ஆரம்பித்தார்.

"என்னத்துக்காக இந்தத் திதி செய்கிறாய்: உனக்குத் தகப்பனார் என்று ஒருவர் இருந்ததில்லை. யாரோ ஒருவர் சொன்னதைக் கேட்டு செலவு செய்கிறாய். தகப்பனார் என்கிற கட்டுக் கதையை நம்பாதே" என்றார்.

" நீர் சொல்வது எனக்கு விளங்கவில்லை. என் தகப்பனார் எனக்கு இந்த வீட்டை வைத்துவிட்டுப் போனாரே? அவர் இல்லாமலிருந்தால் எனக்கு வீடு எங்கே வந்திருக்கும்?" என்றான்.

" தகப்பனார் இருந்தார் என்று உனக்கு எப்படித் தெரியும்? நீ அவரைப் பார்த்தாயா?" என்று கேட்டார். விருந்துக்கு வந்த பண்டிதர்.

"இந்த வீடு எப்படி உண்டாயிற்று? அவர் கட்டித்தானே உண்டாயிற்று?" என்றான் பையன்.

" பைத்தியக்காரனே! வீடு செங்கல்லால் உண்டாயிற்று. செங்கல்லும், சுண்ணாம்பும், மரச்சாமானும், மூங்கிலும், ஓட்டு வில்லைகளும் சேர்ந்து வீடு உண்டாயிற்றென்று உனக்குத் தெரியவில்லையே! நீ படித்துக் கொஞ்சம் அறிவு சம்பாதிக்கவேண்டும். திருக்குறளையாவது படி" என்றார்.

"இந்தப் பசுமாடு எப்படி வந்தது எனக்கு" என்று சுப்பராயன் கேட்டான்.

" பசுமாடா? சந்தையில் போய்ப் பார்! எத்தனையோ மாடுகள், எத்தயோ கன்றுகள் அங்கே காண்பாய்! உனக்குத் தகப்பன் கதையை யார் சொன்னது? பசு மாடு இருந்தால் தகப்பன் இருந்ததற்கு அது அத்தாட்சியா?" என்று சிரித்தார் பண்டிதர்.

"இந்தப் பணம் எப்படி வந்தது? தானாக உண்டாகுமா?" என்றான் சுப்பராயன்.

" எந்தப் பணம்?" என்று கேட்டார் பண்டிதர்.

"இதோ ஒரு ரூபாய். இதைப்போல் பல ரூபாய்கள்" என்று தன் மடியிலிருந்த எடுத்து, ஒரு வெள்ளி ரூபாயைக் காட்டினன். அந்த ரூபாயை வாங்கிக்கொண்டு இடி இடியெனப் பண்டிதர் சிரித்தார்.

"ரூபாயை நன்ருகப் பார். சர்க்கார் அதிகாரிகள் வெள்ளியைத் தட்டி முத்திரை போட்டிருக்கிருர்கள். நீ சர்க்காருக்கு அல்லவா திதி செய்யவேண்டும்! மூடனே, பானை களிமண்ணுல் ஆயிற்று. வீடு செங்கல்லால் ஆயிற்று. பணமும் பூமியிலிருந்தெடுத்த வெள்ளியின் மேல் போட்ட சர்க்கார் முத்திரையால் உண்டாயிற்று. ஏமாந்து போக வேண்டாம். ஊரார் சொல்லும் கதையைக் கேட்டு நீயும் நானும் ஏமாந்துபோக வேண்டியதில்லை" என்ருர்.

சுப்பராயனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. பண்டிதர் சொல்லுவது நியாயம்போல் தோன்றிற்று. சிராத்தம் செய்வதை நிறுத்தி விட்டான்.

இவ்வாறே பல சுப்பராயன்மார்கள் உண்டு. பண்டிதர்களும் உண்டு. இவர்கள் இந்தப் பூமண்டலமும், ஆகாயத்தில் பிரகாசிக்கும் ஜோதிகளும், சூரிய சந்திரர்களும் எல்லாமே அணுக்களாலானவை; மாருத விதிகளுக்கு அடங்கியவை; ஆனபடியால் கடவுள் என்பது அனுவசியமான கதை என்பார்கள். அணுக்களும், அவற்றின் சக்தியும் அவற்றை ஆட்டும் விதியும் எல்லாம் தாமாக ஆனவை என்று எண்ணிக் கூத்தாடுவார்கள். பக்தியைப் பரிகாசம் செய்வார்கள்.

சரி, குறளைப் படிக்கச் சொன்னாரே பண்டிதர் அதையும் படிக்கலாம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

'ஆதி பகவன்' என்பது கடவுள்.

பௌத்தமா, ஜைனமா, அல்லது எந்தச் சமயத்தில் சொல்லப்பட்ட கடவுள் என்பது அல்ல கேள்வி. திருவள்ளுவர் தாம் கண்ட கடவுளைத் தியானித்துக் குறளை எழுதினார். அது போதும் நமக்கு.

கடவுள் சர்வக்ஞன். அதாவது எல்லாம் அறிந்தவன் என்று இறைவனுடைய பல குணங்களில் ஒன்றை எடுத்துச் சொல்லுவது பக்தர்களின் வழக்கம்.

கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நல்தாள் தொழாஅர் எனின்.

'வாலறிவன்' என்றால் சர்வக்ஞன்.

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

இக்குறட் பாட்டோடு அடியிற் கண்ட நம்மாழ்வார் பாசுரத்தையும் பார்க்கலாம் :—

கொள்கை கொளாமை இலாதான்
எள்கல் இராகம் இலாதான்
விள்கல் விளாமை விரும்பி
உலகளந் தார்க்கு ஓர் அமுதே.

(எள்கல் – இகழ்தல்; இராகம் – ஆசை.)

அடியிற் கண்ட கீதை சுலோகத்தையும் பார்க்கலாம் :—

ஸமோ (அ) ஹம்ஸர்வ பூதேஷு
ந மே த்வேஷ்யோ (அ) ஸ்தி ந ப்ரிய :

'எனக்கு எல்லாரும் சமம். யாரையும் நான் வெறுப்பது கிடையாது. யாரையும் இவன் எனக்கு வேண்டியவன் என்று விரும்புவதும் கிடையாது. வேண்டுதல் வேண்டாமை இலாதவன் நான்' என்கிருன் கண்ணன்.

இப்படி யாரிடமும் பாரபட்ச மில்லாத இறைவனுடைய அடிசேர்ந்தவருக்கு எந்தத் துன்பமும் இல்லை யென்ருர் திருவள்ளுவர்.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்த லரிது

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

இந்த இரண்டும் குறள் பாட்டுக்கள், இவற்ருேடு கீழ்க்கண்ட நம்மாழ்வார் பாசுரத்தைப் படித்துப் பாருங்கள் :

பிறவித் துயரற ஞானத்துள் நின்று
துறவிச் சுடர் விளக்கம்தலைப் பெய்வார்
அறவனை ஆழிப் படை அந்தணனை
மறவியை இன்றி மனத்து வைப்பரே.

'அறவாழி அந்தணன்' என்பது கடவுள்; குறளிலும் அதுவே; நம்மாழ்வார் பாசுரத்திலும் அதுவே.

"இறைவன் அடி சேர்ந்தவர் பிறவிக் கடலை நீந்திக் கரையேறுவர் ; இறைவன் அடி சேராதவர் பிறவிக் கடலை நீந்த மாட்டார்."

திருவள்ளுவரின் இந்தச் சொல்லுக்கு மேல் கடவுளைப்பற்றி என்ன சொல்லவேண்டும் ? இந்த மொழிகளைக் கொண்டே நம்மாழ்வார் இறைவனை 'புணை' என்று சொல்லி 'புணைவன் பிறவிக் கடல் நீந்துவார்க்கே' என்றார். (திருவாய் மொழி–190.)

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்பது குறள் (35–10)

'பற்றற்றான்' என்றது இறைவனை. 'கொள்கை கொளாமை இலாதான்' என்று நம்மாழ்வார் பாடியதும் இறைவனையே. இந்தக் குறள் பாட்டினோடு அடியிற்கண்ட ஆழ்வார் பாசுரங்களை வைத்துப் பார்க்க :

'பற்றிலன் ஈசனும் முற்றவும் நின்றனன் பற்றிலையாய்
அவன் முற்றில் அடங்கே' (திருவாய்மொழி–17.)

அற்றது பற்று எனில் உற்றது வீடு உயிர், செற்றது
மன்னுறில் அற்று இறைபற்றே (திருவாய்மொழி–16.)

இறைபற்று என்று நம்மாழ்வார் தெய்வபக்திக்கு சுத்தத் தமிழ் மொழித் தொடர் அழகாக வைத்தார்.

"ரஸோ அபி பரம்த்ருஷ்ட்வா நிவர்த்ததே."

என்று கீதையில் சொல்லிருப்பதை 'பற்று அறவே ஒழிந்து' கொஞ்சமும் பசை ஒட்டாமலிருக்க வேண்டுமானால் இறை பற்றைக் கெட்டியாகப் பிடிப்பாய் என்கிறார் நம்மாழ்வார்.

"பற்றற்ருன் பற்றினைப் பற்றுக. பற்று விடுவ தற்கு அப்பற்றைப் பற்றுக" என்கிருர் திரு வள்ளுவர்.

திருவள்ளுவர் நம்மாழ்வாரும் ஒன்ருகப் பேசிக் கொண்டே பாடினுர்கள்போல் தோன்றுகிறது இந்தப் பாட்டுக்களைப் படிக்கும்போது!

திருக்குறள் (38–7) சொல்லுகிறது:

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

"வகுத்தான்" என்பது இறைவன்.

ஆழ்வார்களும் சிவனடியார்களும் பாடி வழிபட்ட இறைவனை, அவர்கள் நம்மை யெல்லாம் வழிபடும் படி தூண்டும் இறைவனையே திருவள்ளுவரும் வழி பட்டார்; வழிபடச் சொல்லுகிருர்.

தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்ருங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. (குறள் 5–43)

'தென் புலத்தார்' என்ருல் பித்ருக்கள். இறந்த வர்களை மறவாமல் சில சடங்குகள் செய்து நினைவில் வைத்து வருவது நலம் என்கிருர் திருவள்ளுவர். குறளில் தெய்வம் மட்டும் அல்ல, சிராத்தம் செய்வது கூட நல்லது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

புவனேசுவரி சுப்பராயனைப் போல் நாம் ஏமாந்து போக வேண்டியதில்லை. எங்கும் பரவி நிற்கும் காற்றைப்போல், ஆகாயத்தைப் போல், எங்கும் வியாபித்து நிற்கும் சக்தி அவனே!

பசி, தாகம், அன்பு, இணைவிழைச்சு வேகம்-இவற்றைப்போல் கடவுளுக்குப் பக்தி செலுத்தும் ஆசையும் ஒரு இன்றியமையாத பிரகிருதி தத்துவம். பசிக்கும் மற்ற வேகங்களுக்கும் போதிய உணவு தராமல் போனால் உடல் கெட்டுப்போகும். கடவுளை வழிபடும் இயற்கைப் பசிக்கும் உணவு தரவேண்டும். இல்லையேல், பிரகிருதியை நிராகரித்தால் என்ன தண்டனையோ, அது வந்து சேரும். மூளை கெட்டு போய்த் துயரமும் மனக்கோளாறும் வந்து சேரும்.

இறைவனுக்கும், அவனின்று பிரிந்து உண்டான பொருள்களுக்கும் ஒரு தொடர்பு இருந்தே வருகிறது. அதுவே இறைபற்று; தெய்வபக்தி. அந்த இயற்கை வேகத்தைப் புறக்கணித்தோமானால் மனோ வியாதிகள் வந்து சேரும். ஆண்டவன் அவசியமில்லை என்று சொல்லி நன்றாகவே இருப்பவர்கள் உண்டு—சிலர் விவாகமில்லாமல் தனிக் கட்டையாக இருப்பது போல். பழைய சொத்து இருக்கும் வரையில் சம்பாதிக்காமல் இருக்கலாம். தானாகவே யோகக்ஷேமம் நடைபெறும். ஆனால் கொஞ்ச காலத்துக்குப் பிறகு அனர்த்தம்தான்!

———

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.
48407
9
31K31
Book Presented by:
Dr. T. P. MEENAKSHISUNDARAN,
VICE-CHANCELLOR,
MADURAI UNIVERSITY.

PRINTED AT
THE INDIA PRINTING WORKS
MYLAPORE, MADRAS.